# களத்தில்

அனைத்துலக தமிழீழ மக்களாகிய நீங்கள் எமது போராட்டத்துக்கு தோள் கொடுத்து உதவினால் நாம் இந்தப் போரில் வெற்றி கொள்வது உறுதி. எமது தாயகம் மீட்கப்படுவதும் உறுதி . நாம் தன்னாட்சி பெறுவதும் உறுதி.

*- தமிழீழத் தேசியத் தலைவர்*

திருவள்ளுவர் ஆண்டு 2028 (06.05. 1998 ) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தித் தாள் (160) அன்பளிப்பு: 60 p


# உங்கள் தாய்மண் அழைக்கிறது உங்கள் உழைப்பு உடன் உதவியாகட்டும்

நீங்கள் பிறந்த பூமி – உங்கள் அன்னையர் தந்தையர் உற்றார் உறவினர் நண்பர்கள் வாழ்ந்த– வாழ்கின்ற பூமி – இன்று விடுதலைக்கான பிரசவ வேதனையை அனுபவித்துக் கொண்டிருக்கிறது. தமிழீழத் தேசத்தை மீள அமைத்து பாதுகாப்புடன் கூடிய அமைதியுடன் வாழ தமிழீழத் தேச மக்கள் ஜீவமரணப் போராட்டம் நடாத்திக் கொண்டிருக்கும் இந்நேரத்தில், எதிரி அதனைத் தடுப்பதற்குப் பலமான திட்டங்களுடன், எங்கள் ஊர்களையும் உயிர்களையும் நாசமாக்கி, அதற்குப் சமாதானத்திற்கான யுத்தம் என்றும் பாதை திறப்புக்கான யுத்தம் என்றும் பற்பல பெயர்கள் சூட்டி, அவற்றை இன்னொரு தமிழனின் குரலில் உலகில் உலாவர வைத்துள்ளான். தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு தமிழீழ மக்கள் உதவ முடியாதவாறு அவர்கள் மேல் இராணுவ அழுத்தங்கள் எதிரியால் இறுக்கமாக்கப் பட்டுள்ள இந்நிலையில் உங்கள் தேசம்– தாயினும் மேலான உங்கள் தமிழீழத் தாய் நாடு– புலம்பெயர் தமிழீழ மக்களாகிய உங்களை தனது விடுதலை விரைவு பெற உதவும்படி உரிமையுடன் அழைக்கிறது. உலகில் எதிரி பரப்பி வரும் உண்மைக்கு மாறான தகவல்களை தவிடு பொடியாக்குவதும், எங்கள் தமிழீழ மக்களுடைய பாதுகாவல்களாக நின்று தேசவிடுத்லைக்காகப் போராடி வரும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு கைகொடுப்பதும், இன்று புலம்பெயர் தமிழர் ஒவ்வொருவருக்கும் காலக் கடமையாகி உள்ளது. இந்த கடமையை நாம் எம்மாலான முழுப்பலத்துடனும் இன்றே செய்யத் துணிவோமாயின், நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும். எங்கள் தமிழீழத் தாயின் தேசக்கொடி விண்ணிலாடி நாளை நாமும் அவள் மடியில் அமைதிவாழ்வு வாழ அழைக்கும். இதை விரைவுறச் செய்யும் பொறுப்பு புலம்பெயர் தமிழராகிய எம் கையில்! காலதாமதம் வேண்டாம். இன்றே செயற்படுவோம்.

*(இது குறித்த விளக்கமான கட்டுரை நடுப்பக்கத்தில் பிரசுரமாகிறது)*



இனத்தவர் இருப்புக்கு தன்னை மறைப்பவர்

## ஐ.நா. பொருளாதார சமுக கலாச்சார கமிட்டியில் சிறீலங்கா உணவை ஆயுதமாக்குவதற்கு கண்டனம்

ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார சமுக கலாச்சார கமிட்டியில், Food First International Action என்ற அமைப்பு சிறீலங்கா உணவை தமிழர்களுக்கு எதிரான ஆயுதமாகப் பயன்படுத்துவதற்கு கண்டனம் தெரிவித்துள்ளது.

ஏப்ரல் 27ம் திகதி நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார சமுக கலாச்சார கமிட்டியின் மதிய அமர்வில், சிறீலங்கா அரசாங்கம் தமிழ் மக்களுக்கும், தமிழ் அகதிகளுக்கும் எதிரான ஆயுதமாக உணவைப் பயன்படுத்துவதை மேற்படி நிறுவனப் பிரதிநிதிகள், ஐக்கிய நாடுகள் பொருளாதார சமுக கமிட்டியின் கவனத்திற்கு கொண்டு வந்தனர். அத்துடன் சிறீலங்கா அதிகாரிகள் தமிழ்மக்களுக்கு மருந்துக்கள், உரவகைகள் போன்ற அத்தியாவசிய பொருட்களின் விநியோகங்களை பெருமளவில் தடுத்து வருவது குறித்தும், இந்நிறுவனப் பிரதிநிதிகள் ஐ.நா. கமிட்டிக்கு வாக்குமூலத்தில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சிறீலங்கா அரசாங்கத்தின் அறிக்கையில், தமிழர்களின் நிலைமைகளோ, அவர்கள்

தொடர்ச்சி 2 ம் பக்கம்...

## இரு தினங்களுக்கு யுத்த நிறுத்தம்

இரு தினங்களுக்கு யுத்த நிறுத்தத்தை தமிழீழத் தேசியத்தலைவர் வேபிரபாகரன் அவர்கள் அறிவித்துள்ளார். இம்மாதம் 6ம் திகதியும் 7ம் திகதியும் இவ் யுத்த நிறுத்தம் அமுல் செய்யப்படவுள்ளது. ஐக்கிய நாடுகள் சபை செயலாளர் நாயகத்தின் விசேட குழுவொன்று ஒலாரு ஒட்டுனு( OLARA OTUNU) தலைமையில் தமிழ்க் குழந்தைகளுக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் யுத்தத்தினால் ஏற்படுத்தப்பட்டு வரும் அழிவுகளை மதிப்பீடு செய்வதற்காக வன்னிப் பெருநிலப் பரப்புக்கு விஜயம் செய்வதையொட்டியே இவ் யுத்த நிறுத்தம் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்தின் இவ் விசேட குழு தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளையும் சந்தித்து உரையாடவுள்ளது.

## திருகோணமலை மெகாஸ்கொட இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் வெற்றிகரமான அதிரடித்தாக்குதல்

திருகோணமலை மெகாஸ்கொட பகுதியில் முகாமிட்டிருந்த சிறீலங்கா இராணுவத்தினர் மீது ஏப்ரல் 28ம் திகதி இரவு 9.30 மணியளவில் விடுதலைப்புலிகள் தாக்குதல் ஆரம்பித்தனர். விடுதலைப் புலிகளின் ஆக்ரோஷமான தாக்குதல்களுக்கு முகம் கொடுக்க முடியாத சிறீலங்கா இராணுவத்தினரில் மூவர் கொல்லப்பட ஏனையோர் காயமுற்றோரையும் தூக்கிக் கொண்டு தப்பி ஓடியதாக களச் செய்திகள் தெரிவிக்கின்றன. இவ் அதிரடித்தாக்குதல் பத்தே

தொடர்ச்சி 2 ம் பக்கம்...

# புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

# சிறீலங்கா இராணுவம் யாழ்குடா நாட்டில் தள்ளாடுகிறது

❐ சராசரி இரண்டு இராணுவத்தினனாவது கொல்லப்படுகிறான்

❐ எந்நேரத்திலும் தங்கள் முகாங்கள் அழிக்கப்படலாம் என அச்சம்

யாழ்குடாநாட்டில் அனுதினமும் சராசரியாக இரண்டு இராணுவத்தினனாவது தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதல்களால் கொல்லப்படுவதாக அங்கிருந்து கிடைக்கும் புள்ளிவிபரங்கள் உலகுக்கு வெளிப்படுத்தியுள்ளன.

இதனால் தாம் ஆக்கிரமித்துள்ள யாழ்குடா நாட்டைத் தக்க வைத்துக் கொள்வது இயலாத காரியமாகி வருவதாக சிறீலங்கா இராணுவ வட்டாரங்களில் ஆழ்ந்த கவலை தோன்றி உள்ளது. யாழ்குடா நாட்டை சந்திரிகா பட்டாளம் ஆக்கிரமித்த வேளை தமிழீழத் தேசத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் "ஆட்பலம் சுடுதிறன் பலம் கொண்டு எமது தாயகமண்ணை ஆக்கிரமிக்கலாம் , ஆனால் ஆக்கிரமிப்பாளர்கள் எமது மண்ணில் நிலை கொள்ள நாம் அனுமதியோம். எங்கள் மண்ணே ஆக்கிரமிப்பாளர்களின் கல்லறைகள் ஆக மாறும்." என அவ்வாண்டு மாவீரர் தின உரையில் எச்சரித்திருந்தமை உலகறிந்த. ஒன்று. எங்கள் தேசத் தலைவரின் உரை உண்மையாகி வருவதை நாள் தோறும் யாழ் குடா நாட்டில் இருந்து கிடைக்கும் செய்திகள் ஊர்ஜிதம் செய்து வருகின்றன.

யாழ்குடாநாட்டில் சென்ற மாதக் கடைசியில் அதாவது ஏப்ரல்25,26,27 ம் திகதிகளில் தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்ட மூன்று வெவ்வேறு தாக்குதல்களில் 8 இராணுவத்தினர் உயிரிழந்துள்ளதாக குடாநாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஏப்ரல் 25 ம் திகதியன்று பண்டத்தரிப்பு விளான் சந்தியில் சுற்றி வளைப்புத் தேடுதலுக்கு என்று புறப்பட்ட சிறீ லங்கா இராணுவ அணியினர் தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகினர். இத்தாக்குதலில் 4 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

ஏப்ரல் 27 ம் திகதி அல்லிப்பளையில் குளத்தில் குளிக்கவெனப் போன சிறீ லங்கா இராணுவத்தினர் கண்ணி வெடித்தாக்குதலுக்கு இலக்காகி இரு இராணுவத்தினர் உயிரிழக்க மூவர் படுகாயமடைந்தனர்.

ஏப்ரல் 28ம் திகதியன்று பச்சிலைப்பள்ளி தட்டுவான் கொட்டியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கிளைமோர் தாக்குதலில் இரு சிங்களப் படையினர் கொல்லப்பட நாலு படையினர் படுகாயமடைந்துள்ளனர்.

இத் தாக்குதல்களின் பொழுது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எவ்வித இழப்பும் ஏற்படவில்லை என்பது ஈண்டு குறிப்பிடத் தக்கது. ❐

## ஐ.நா. பொருளாதார சமூக கலாச்சார .....

அனுபவிக்கும் துன்பங்களோ துயரங்களோ, பட்டினி நிலைமைகளோ எடுத்துக் கூறப்படாது புறக்கணிக்கப்பட்டுள்ளது என மனித உரிமைகளுக்கான தமிழர் மையத்தின் பிரதிநிதி ஐக்கிய நாடுகள் பொருளாதார சமுக கலாச்சார கமிட்டியிடம் எடுத்து விளக்கினார். அவர் தனது வாக்குமூலத்தில் "சிறீலங்கா அரசாங்கத்தின் E / 1990/5 Add.32 இலக்க ஆவண அறிக்கை, தமிழர்களின் பாரம்பரிய தாயகமான வடக்கு கிழக்குப் பிரதேசத்தின் பொருளாதார, சமூக கலாச்சார உரிமைகளின் தன்மைகளை வெளிப்படுத்தவில்லை எனக் கூறி, இதனால் தமிழ் மக்கள் அனுபவிக்கும் துன்பங்கள் துயரங்கள் கொடுமைகள் புறக்கணிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார். தமிழ் மக்களின் அடிப்படை மனித உரிமையான நடமாடும் சுதந்திரம், சிறீலங்கா இராணுவத்தால் கட்டுப் படுத்தப்படுகிறது. வடக்கு கிழக்கில் உள்ள வைத்திய சாலைகள் புறக்கணிக்கப் படுகின்றன. இதனால் அங்கு போதிய மருந்துகள் இன்றி மக்கள் பெரும் இன்னல்களை அனுபவிக்கின்றனர். தமிழ் மக்களின் பிரதான தொழில் முயற்சிகளான விவசாயமும், கடற்றொழிலும், சிறீலங்கா அரசாங்கத்தால் தடை செய்யப் பட்டுள்ளன. இதனால் மக்கள் பட்டினி நிலையை அனுபவித்து வருகின்றனர். தமிழர்களின் கலாச்சார உரிமைகள் அனைத்தும் மறுக்கப்பட்டு திட்டமிட்ட இனஅழிப்பு தொடர்கிறது. தமிழர்கள் இனப்பாகுபாட்டிற்கு உள்ளாக்கப்பட்டு வருவது மட்டுமல்லாமல், அவர்களின் பிறப்புரிமையான சுயநிர்ணய உரிமையும் மறுக்கப்படுகிறது." என எடுத்துரைத்தார்.

கமிட்டி உறுப்பினர்களால் தொடுக்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளித்த பிரதிநிதி, "கடந்த பத்து ஆண்டுகளுக்கும் மேலாக தமிழர் தாயகமான வடக்கு கிழக்குப் பகுதிகளில் விவசாயம் சரியான முறையில் நடைபெறவில்லை" எனவும், "தமிழர்களுடைய பொருளாதார சமுக கலாச்சார உரிமைகள், மாறிமாறி ஆட்சிக் கட்டிலேறிய அரசாங்கங்களினால் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டமையினாலேயே ஆயுதப் போராட்டம் தோற்றம் பெற்றது" எனவும் எடுத்து விளக்கினார். ❐

## திருகோணமலை மெகாஸ்கொட .....

பத்து நிமிடத்தில் இழப்புகள் ஏதுமின்றி குறித்த வெற்றி இலக்கை எய்தியதாக தமிழீழ விடுதலை புலிகள் தெரிவித்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் தாங்கள் கைப்பற்றிய ஆயுதங்களின் பட்டியல் ஒன்றை வெளியிட்டுள்ளனர். பட்டியல் விவரம் வருமாறு :- 81 மி மீ மோட்டார் 01, 81 மி.மீ செல்ஸ் 36, 81 மி.மீ பரா செல்ஸ் 01, 60 மி.மீ செல்ஸ் 50, 60 மி.மீ பரா செல்ஸ் 05, ஆர்.பி.ஜி 02, ஆர்.பி.ஜி செல்ஸ் 05, ஆர்.பி.ஜி புரப்பிளர் 03, ஏ.கே.எல்.எம்.ஜி 01, ஏ.கே.எல்.எம்.ஜி லிங்ஸ் 375, பி.கே. எல்.எம்.ஜி செயின் பெட்டிகள் 06, பி.கே. எல்.எம்.ஜி மகசின் 01, பி.கே. எல்.எம்.ஜி புல்லட் லிங்ஸ் 1200, T 56–II ரைபிள்ஸ் 04, T 56 மகசின்ஸ் 05, ஐ.எம். புல்லட்ஸ் 2173, உயர்வலு தொடர்பு சாதனக் கருவி 02, ஹொல்ஸ்டர் 05 , கிட் பாக்ஸ் 12. ❐

## தமிழ்க் குடும்பப் பெண்மீது இராணுவம் பாலியல் வன்முறை

தமிழ்ப் புத்தாண்டு தினமான ஏப்ரல் 14ம் திகதியன்று பருத்தித்துறை கார்த்திகா உணவகத்தில் அல்வாய் வீதியில் வசிக்கும் திரு மணமாகி ஒரு குழந்தைக்குத் தாயான வசந்தா செல்வராசா என்ற தமிழ்ப் பெண்மீது சிறீலங்காப் படையினர் பாலியல் வன்முறை புரிந்துள்ளனர். இக் கொடிய வெறித்தனத்தை கண்ணுற்ற அவ் உணவகப் பெண் உரிமையாளர் சிறீலங்கா இராணுவக் காடையர்களின் இச் செயல் குறித்து சிறீலங்காப் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். இதனை அடுத்து சிறீலங்கா இராணுவத்தினர் உணவக உரிமையாளரை முறைப்பாட்டை மீளப் பெறும்படி மிரட்டியுள்ளனர். இதற்கு முறைப்பாட்டாளர் இணங்க மறுத்துள்ளார். இதற்கிடையில் ஏப்ரல் 16ம் திகதி உணவக உரிமையாளர் பொலிஸ் விசாரணைக்குத் தோற்ற இருந்தார். இதனால் சீற்றம் கொண்ட சிறீலங்கா இராணுவத்தினர் அதற்கு முன்னதாக உணவகத்திற்குள் புகுந்து உணவக உரிமையாளர் மீது மண்ணெண்ணெயினை ஊற்றி தீமூட்டி எரித்து படுகொலை செய்து சாட்சியத்தை அழித்தொழித்துள்ளனர்.

## ஒரே வழி தங்கத் தமிழீழமே........

அவர்கள் என்ன சொல்லியும் எதைச் சொல்லியும் பிரயோசனம் இல்லாமல் போய்விடுகிறது. எருமை முதுகில் பெய்த மழைபோல் அவை வீணாகிவிடுகிறது. அந்த வீடு ஒரு இந்து மதகுருவின் வீடு என்பதோ, அந்த இந்து மதகுரு கோவிலில் நித்திய பூசை செய்துவரும் அர்ச்சகர் என்பதோ கண்டுகொள்ளப் படவில்லை. கணக்கில் எடுக்கப்படவுமில்லை.

மஞ்சள் அங்கியுடுத்த பௌத்த தேரர்களின் காலில் விழுந்து எழுகின்ற சிங்கள கடற்படையினருக்கு இந்து மதகுருவும் அவரது மகளும் மருமகனும் ஒரு பொருட்டாகக் கூடத் தெரியவில்லை. அவர்களுக்கு கொடுக்க வேண்டிய மரியாதையில் ஒரு கடுகளவேனும் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் பிறக்கவில்லை. மனிதர்களுக்கு இருக்க வேண்டிய சராசரியல்ல குறைந்தபட்ச பண்பாடு கூடப் பேணப்படவில்லை.

தென்தமிழீழத்தின் மூதூர் பகுதியில் உப்பாறு மற்றும் பல பகுதிகளைச் சேர்ந்த பலநூற்றுக்கணக்கான தமிழ்க் குடும்பங்கள் கடந்த மாதம் கேட்டுக் கேள்வியின்றி இரவோடு இரவாக அந்தக் கிராமத்திலிருந்து சிங்கள இராணுவத்தால் பலவந்தமாக வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். திருகோணமலை மாவட்ட இராணுவ அதிகாரி இந்த வெளியேற்றத்தை நியாயப்படுத்தியது மட்டுமல்லாமல், ஆற்றைக் கடந்து உப்பாறு கிராமத்துக்குள் நுழைபவர்கள் சுட்டுக் கொல்லப் படுவார்கள் எனவும் எச்சரிக்கை விடுத்திருக்கிறார். குறைந்த பட்சம் அந்தக் கிராம மக்களால் கைவிடப்பட்ட ஆனிரைகள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களை கொண்டு வரவாவது அனுமதிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டபோதே, திருகோணமலை மாவட்ட இணைப்பதிகாரியும் 22ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரியுமான மேற்சொல்லப்பட்ட இராணுவ அதிகாரி, அந்தக் கோரிக்கையை நிராகரித்தது மட்டுமல்லாமல் ஆற்றைக் கடந்து ஊருக்குள் நுழைபவர்கள் சுடப்படுவர் என்றும் எச்சரித்திருந்தார்.

இதே சமயம் மூதூர்ப் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து, பள்ளிக் குடியிருப்பு, சிறினிவாசபுரம் பகுதிகளில் தங்கியுள்ள பொது மக்களுக்கு, இடம் பெயர்ந்தோருக்கான நிவாரணம் வழங்க சிங்கள இராணுவ அதிகாரிகள் அனுமதி மறுத்துள்ளனர். இதில் 174 குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க மூதூர் பிரதேச செயலகம் நடவடிக்கை எடுத்தபோதும் சிங்கள இராணுவ அதிகாரிகள் அதற்கு அனுமதி மறுத்துள்ளார்கள். தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வந்தால் மட்டுமே நிவாரணம் வழங்கப்படுமென இராணுவ அதிகாரிகள் கையை விரித்துள்ளனர். சிங்களப் பயங்கரவாதிகளால் உதவி மறுக்கப்பட்ட இந்த மக்கள் மரநிழல்களிலும், உறவினர்கள் வீடுகளிலும் தங்கிக் காலத்தைக் கழிக்கின்றனர். இந்த வேண்டப்படாத சுற்றிவளைப்பு மூலம் சிங்களவர்கள் மிருகத்திற்குப் பிறந்தவர்கள் என்ற மகாவம்ச ஆசிரியரின் கட்டுக்கதை ஒரு வேளை உண்மையாகவிருக்கலாம் என்பதை சிங்கள இராணுவத்தினர் நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள்.

சிறிலங்கா இராணுவத்தின் இந்த அநாகரிகமான செயற்பாடுகளை, தான்தோன்றித்தனமான மிலேச்சத்தனத்தை, அட்டூழியங்களை, அப்பட்டமான மனிதவுரிமை மீறல்களைக் கொழும்புத் தமிழ் குழுக்கள் கண்டு கொள்வதாகவே இல்லை.

உதைக்கிற கால்களை முத்தம் இடுவதிலேயே இந்தத் துரோகக் குழுக்கள் தங்கள் காலத்தை செலவிடுகின்றன. சாட்டுக்கு அவ்வப்போது நீ அடிக்கிற மாதிரி அடி நான் அழுகிறவன் மாதிரி அழுகிறேன் என்ற விதத்தில் அறிக்கை விடுவதோடு அமைதியடைந்து விடுகின்றன.

பாரதக் கதையில் வியாசரோ வில்லிபுத்தூதரோ பாடிய பாரதக் கதையில் அல்ல மகாகவி பாரதியார் பாடிய பாஞ்சாலி சபதத்தில் ஒரு காட்சி வருகிறது.

தருமன் தன் நாட்டையும் நகரத்தையும் சூதில் இழந்தபின், தன்னையும் தன் தம்பிமாரையும் இழந்தபின் கடைசியாக பாஞ்சாலியையும் பணயம் வைத்து இழந்துவிடுகிறான். பாண்டவர் தம் தேவியவள் பாதியுயிர் கொண்டுவர துரியோதனன் தம்பி நீசன் துச்சாதனன் அவள் நீண்ட கருங்குழலை கரம் பற்றி அரச சபைக்கு முன் இழுத்து வருகிறான். வழி நெடுக மொய்த்தவராய் 'என்ன கொடுமை யிது' என்று எல்லோரும் வெறுமனே பார்த்திருக்கிறார்கள். பஞ்சபாண்டவர் என்ன செய்தார்கள்?

"வீரமிலா நாய்கள் விலங்காம் இளவரசன்

தன்னை மிதித்து தராதலத்திற் போக்கியே

பொன்னையவள் அந்தப் புரத்தினிலே சேர்க்காமல்

நெட்டை மரங்களென நின்று புலம்பினர்

நெட்டை மரங்களென நின்று புலம்பினர் பெட்டைப் புலம்பல் பிறர்க்குத் துணையாமோ என்று பாண்டவரைப் பார்த்து பாரதி கேட்கிறான்.

**தமிழ் மக்கள் சிங்கள ஓநாய்களால் வீடுகளிலும் நடுத் தெருவிலும் வைத்து வேட்டையாடுவதைக் கண்டும் கொடும்புத் தமிழ்த் துரோகக் குழுக்கள் நெட்டை மரங்களென நின்று புலம்பல் புலம்புகின்றன.**

**இவை யாவற்றிக்கும் முற்றுப் புள்ளி வைத்து சந்திரிகா அரசின் கொடுங்கோன் மையிலிருந்து நிரந்தரமாக விடுபட்டு சுதந்திரமாகத் தலை நிமிர்ந்து வாழத் தமிழ் மக்களுக்கு இன்று இருக்கும் ஒரே வழி தங்கத் தனித் தமிழீழமே!**

**ஒரே தலைமை விடுதலைப் புலிகளே!** ❐



## புலிவாலைப் பிடித்தவன் கதையாக...

சிங்கள மொழியில் 'புலிவாலைப் பிடித்தவன் கதையாக..' என ஒரு மரபுச் சொற்றொடர் உண்டு. ஒருவன் வேலிக்கு அந்தப் பக்கமாக கிடந்த ஒன்றை கையால் பிடித்து இழுத்து விட்டான். அதன் பிறகு தான் அது வேலிக்கு அந்தப்பக்கமாக கிடந்த புலியின் வால் எனக் கண்டு கொண்டான். விட்டால் புலி திரும்பிப் பாயும். பிடித்து இருப்பது என்றாலும் எவ்வளவு நேரத்திற்குத் தான் முடியும். அவனின் தவிப்பை மரபுச் சொற்றொடராக்கி சிங்கள மொழியில், வீணாக ஆபத்தை விலைக்கு வாங்குவதை விளக்கும் சொற்றொடராக இதனை( கொற்றியா வல்கய அல்லா கனிம சந்தஹா) பயன் படுத்துகின்றனர்.

ஆனால் சிறீலங்காவின் இன்றைய அதி உத்தம ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா வேண்டுமென்றே தமிழர்களுடன் யுத்தப்பிரகடனம் செய்து இலங்கைத்தீவின் மக்கள் அனைவரையும் பேராபத்துக்குள் தள்ளிவிட்டார். புலிகளை அடக்க புலி வாலைப் பிடித்த கதையாக யாழ்க் குடா நாட்டை ஆக்கிரமித்த சந்திரிகா தமிழீழ விடுதலைப் புலிகளை காட்டுக்குள் அனுப்பி விட்டதாக வாய்வீரம் பேசிமகிழ்ந்தார். ஆனால் இன்றோ புலிவாலைப் பிடித்தவன் கதையாக யுத்தத்தில் விடுதலைப்புலிகளிடம் தோல்விக்கு மேல் தோல்விகளைத் தழுவி நிற்கும் சிறீலங்கா, யுத்தத்தை தொடரவும் முடியாமல் நிறுத்தவும் மனமின்றி வழமை போல் அப்பாவி தமிழ்ப் பொது மக்களை இனவதை - இனஅழிப்பு செய்து தங்கள் ஆக்கிரமிப்பை உறுதிப் படுத்திக் கொள்ள பகீரதப்பிரயத்தனம் செய்து வருகிறது.

அதிலும் குறிப்பாக கடந்த ஆண்டு வைகாசி 13ம் திகதியன்று 'வெற்றி நிச்சயம்' என்ற பொருள்படும் சிங்களப் பெயருடனான 'ஜெயசிக்குறுய்' என்னும் வீராவேசத் தலைப்புடனும் பாதை திறப்புக்கான இராணுவ நடவடிக்கை என்ற நியாயப்படுத்தல் கோஷத்துடனும் சிறீலங்காவால் ஆரம்பிக்கப்பட்ட யுத்தம் யாருக்கு வெற்றி நிச்சயமாகி வருகிறது என்பதை உலகுக்கு நன்கு தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளது. தமிழீழ விடுதலைப்புலிகளின் உத்தியோக பூர்வமான தகவல்களின் படி 'ஜெயசிக்குறுய்' நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட கடந்த ஆண்டில் மூவாயிரத்திற்கு மேற்பட்ட சிறீலங்கா படையினர் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களினால் கொல்லப்பட்டுள்ளனர். எண்ணாயிரத்திற்கு மேற்பட்ட சிறீலங்காப் படையினர் படுகாயப்படுத்தப் பட்டுள்ளனர். பரந்த விரிந்த மரபுப் போர் அரங்கினுள் வெற்றிகரமான தாக்குதல்களைத் தொடுத்த விடுதலைப்புலிகள் ஆயிரத்து நானூறு போராளிகளின் வீரச்சாவையும் சுமார் ஆயிரம் போராளிகள் படுகாயமடைந்தமையும் சந்தித்த பொழுதிலும் பல முனைகளூடாக பாதை திறக்க முயன்ற சிறீலங்கா படையினரின் சகல முயற்சிகளையும் முறியடித்து உலகுக்கு தமது மரபு வழி இராணுவ வலிமையை நிரூபித்துள்ளனர். 'ஜெயசிக்குறுய்' நடவடிக்கை தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம் வழங்கும் களமாக விடுதலைப் புலிகளால் மாற்றப்பட்டுள்ளமை கள யதார்த்தமாக உள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளைப் பொறுத்த வரை 'ஜெயசிக்குறுய்' நடவடிக்கை ஆரம்பமான சென்ற ஆண்டை தமிழர் மரபு போரின் தொடக்க ஆண்டாக வர்ணித்துள்ளமை தமிழீழ விடுதலைபுலிகள் 'ஜெயசிக்குறுய்' நடவடிக்கையை முறியடிப்பதற்கு ஈட்டிய மகத்தான வெற்றிகளை எடுத்துக்காட்டுவதாக உள்ளது. 'ஜெயசிக்குறுய்' நடவடிக்கை சிறீலங்கா எதிர்பார்த்தமைக்கு மாறாக தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவ வலிமைக்கு சான்றிதழ் வழங்கும் நடவடிக்கையாக விடுதலைப் புலிகளால் மாற்றியமைக்கப்பட்டமை தமிழீழ விடுதலை வரலாற்றில் புதியதோர் திருப்பு முனையை தோற்றுவித்துள்ளது. பலமுறை பலவழிகளில் முயற்சித்தும் மாங்குளம் சந்தியைக் கைப்பற்ற முடியாது தோல்வியைத் தழுவி வரும் சிறீலங்கா படையினர் கடந்த வாரமும் இதற்கான கடும் முயற்சிகளில் இறங்கி அறுபதற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட முன்னூறுக்கு அதிகமான இராணுவத்தினர் காயமடைந்த நிலையில் தோல்வியைத் தழுவியுள்ளனர்.

மேலும் 'ஜெயசிக்குறுய்' நடவடிக்கை தோல்விகளால் சிறீலங்கா ஒருபுறத்தில் திணறிக்கொண்டிருக்க, மறுபுறத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் இவ்வாண்டை கடற்புலிகள் ஆண்டாக பிரகடனப்படுத்தி உள்ளமை் சந்திரிகா பண்டாரநாயக்கா 'சமாதானத்திற்கான யுத்தம்' என்றும் , 'பாதைத் திறப்பு' என்றும் தமிழீழ மக்கள் மேல் தொடுத்த ஆக்கிரமிப்பு யுத்தங்கள் முறியடிக்கப்பட்டு இவ்வாண்டில் சிறீலங்காவின் ஆக்கிரமிப்பு படைகள் தமிழர் தாயகத்தில் இருந்து ஓட விரட்டி அடிக்கப்படப் போகின்றன என்பதற்கு கட்டியம் கூறுவதாக அமைந்துள்ளது. இதனை மேலும் உறுதிப்படுத்துவதாக காங்கேசன் தொகுதிக் கடற்பரப்பில் கடந்த மாதம் புலிகள் நடாத்திய கடற் போரின் வெற்றிகள் காணப்படுகின்றன. இதன் தொடர்ச்சியாக கடந்த கிழமை திருகோணமலை துறைமுகத்திற்கும் கொக்கிளாய்க்கும் இடைப்பட்ட கடற்பரப்பில் சிங்களப்படைகளின் பத்துக்கும் மேற்பட்ட டோராப்படகுகளுடன் ஏழு மணி நேர கடும் சமர் நடாத்தியுள்ள கடற்புலிகள் சிறீ லங்காவுக்குப் பலத்த சேதத்தை ஏற்படுத்தியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும், சிறீலங்காவின் 'ஜெயசிக்குறுய்' நடவடிக்கை தொடங்கப்பட்டதின் பின் திருகோணமலை- மட்டக்களப்பு- அம்பாறை மாவட்டங்களில் கணிசமான பகுதி தமிழீழ விடுதலைப்புலிகளால் மீட்கப்பட்டுள்ளமை தமிழீழ தேசிய விடுத்லைப் போராட்டத்திற்குப் புதிய பரிணாமத்தைக் கொடுத்துள்ளது.

ஆக கூட்டு மொத்தமாக எடுத்து நோக்குகையில் சந்திரிகா-ரத்வத்தை அரசாங்கத்தினால் கடந்த ஆண்டு மே மாதம் 13ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட 'ஜெயசிக்குறுய' இராணுவ நடவடிக்கை தமிழர் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வை சிறீலங்கா ஏற்படுத்த முடியவே முடியாது என்பதை மீண்டும் நிரூபித்து நிற்கிறது. எனவே, புலிவாலைப் பிடித்தவன் கதையாகத் தவிப்பதை விடுத்து, தமிழர் தாயகத்தினை ஆக்கிரமித்துள்ள படைகளை விலக்கி தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்கினால் இலங்கைத்தீவின் மக்கள் அமைதிவாழ்வு காண்பது நிச்சயம். ❐

# வன்னிப் பெரு நிலப்பரப்பில் கோலாகலமான மேதின விழா

- ❇ அந்நிய அரசான சிறீலங்கா தமிழரை வதைப்பதை விளக்கும் ஊர்திகள்
- ❇ விடுவிக்கப்பட்ட பகுதிகளின் எழுச்சிகளை சித்தரிக்கும் வாகனங்கள்
- ❇ மக்கள் துயர் விளக்கப் பொதுக் கூட்டங்கள்
- ❇ மக்கள் துன்பம் களையும்படி மகஜர்கள்

தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப் பாட்டில் உள்ள விடுவிக்கப்பட்ட தமிழீழப் பகுதிகளில் உலகத் தொழிலாளர் தினமான மேதின விழா கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

அந்நிய அரசான சிங்கள சிறீ லங்காவினால் தமிழ் மக்கள் வதைக் கப்பட்டு வருவதை விளக்கும் ஊர்திகளும், விடுவிக்கப்பட்ட தமிழீழப் பிரதேசங்களில் மக்களின் சுய முயற்சிகளால் ஏற்படுத்தப்பட்டு வரும் அபிவிருத்திகளையும் எழுச்சிமிகு வாழ்க்கையினையும் சித்தரிக்கும் அலங்கார வண்டிகள் ஆகியவற்றுடன் கூடிய மக்கள் பேரணிகள் ஆங்காங்கே நடாத்தப்பட்டுள்ளன.

இப் பேரணிகளில் சிங்கள அரச படைகளின் இராணுவ நட வடிக்கைகளால் தமிழ் மக்கள் அனுபவித்து வரும் அவல வாழ்க் கையையும் அதனை ஆசீர்வதிக்கும் பௌத்த பிக்குகளின் இனத்துவேசப் போக்கையும் சித்தரிக்கும் ஓவியப் பதாகைகளும் மக்களால் பேரணிகளில் ஏந்திச் செல்லப்பட்டுள்ளன.

அக்கராயன், விசுவமடு, புதுக்குடியிருப்பு , முல்லைத்தீவு ஆகிய இடங்களில் மக்கள் துயர் விளக்கங்களுடன் கூடிய பொதுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. ஆயிரக்கணக்கில் மக்கள் இக் கூட்டங்களில் உற்சாகத்துடன் பங்கு பற்றியதாக செய்திகள் தெரிவிக் கின்றன. முல்லைதத்தீவு மக்கள் மன்றங்களின் பேரவையினர் ஏற்பாடு செய்த பேரணி 4வது கட்டை யிலிருந்தும், ஓட்டுச்சுட்டான் அம்மன் கோவில் சந்தியிலிருந்தும் ஆரம்பமாகி முள்ளிய வளை வித்தியானந்தா கல்லூரி முன்றலைச் சென்றடைந்து அங்கே பொதுக் கூட்டம் நடாத்தப்பட்டது. மற்றொரு பேரணி ஆதரவு தேடும் தமிழ்ச் சிறுவர்களை பேணிப்பராமரித்து கல்வியூட்டி வாழ்வளிக்கும் நிறுவனமான காந்தரூபன் அறிவுச்சோலை சிறுவர் சிறுமிகளுடன் ஆரம்பமாகி சுப்பிர மணியம் வித்தியாசாலை மைதானத்தைச் சென்றடைந்து அங்கே கூட்டம் நடாத்தப்பட்டது.

இம் மே தின விழாக்களில் வன்னிப்பகுதி மக்களின் அவல நிலைகளை விளக்கி அதனைக் களைய உதவும்படியான வேண்டுகோள்களுடன் கூடிய மனுக்கள்- மகஜர்கள், அதிகாரிகளிடமும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதி களிடமும் கையளிக்கப்பட்டன. ❐

# வாதங்கள் விலகட்டும் இதுவே அமைதி மீள வழி சமைக்கும் !!

இலங்கைத்தீவு இந்து சமுத்திரத்தின் அமைதித் தீவு என்ற சொற்றொடர் காலனித்துவம் உருவாக்கிய சிங்களப் பெரும்பான்மை அரசாங்கங்களினால் யுத்தத்தீவென மாற்றப்பட்டுள்ளமை இன்றைய நிலை. இதற்கு காரணம் இலங்கைத் தீவைப் பிடித்துள்ள இருவாதங்கள். ஒன்று சிங்களப் பௌத்த பேரினவாதம். அடுத்தது அந்த சிங்களப் பௌத்த பேரினவாதத்தின் முற்றிய அறுவடையாக இன்று தீவையே சீரழிக்கும் இராணுவ வாதம்.

இதில் முதலாவதான சிங்களப் பௌத்த பேரினவாதம், இலங்கைத்தீவுக்கு பிரித்தானியா உருவாக்கிய பாராளுமன்ற ஜனநாயக ஆட்சி முறையைச் செயலிழக்க வைத்து, இலங்கைத்தீவின் பூர்வீக குடிகளான தமிழர்கள் மீது நவகாலனித்துவம் ஒன்றை அதன் விளைவாக்கியுள்ளது. பிரித்தானிய காலனித்துவம் சிங்கள, தமிழ் தேசங்களின் எல்லைகளை ஒன்றிணைத்ததின் மூலம் சிங்களபௌத்த பேரினவாத வளர்ச்சிக்கு வித்திட்டு, சர்வஜன வாக்குரிமையால் முடிசூட்டி, சோல்பரி அரசியல் அமைப்பின் கீழான ஒற்றையாட்சிப் பாராளுமன்ற அரசியலமைப்பின் கீழ் சிங்களப் பெரும்பான்மைப் பாராளுமன்ற முறைமை எனும் ஆட்சிச் செங்கோலையும் அளித்துச் சென்றது. எனவே இலங்கைத் தீவின் தமிழர் பிரச்சினை என்பது முழுக்க முழுக்க காலனித்துவத்தால் உருவான பிரச்சினை. ஆதலால் தமிழீழ விடுதலைப் போராட்டம் என்பது வெறுமனே இனப்பிரச்சினை அல்ல. உள்நாட்டுப் பிரச்சினையும் அல்ல. சிறுபான்மை- பெரும்பான்மையினப் பிரச்சினையும் அல்ல. உண்மையில் இது இலங்கைத் தமிழ் மக்களின் காலனித்துவ விடுதலைக்கான தொடர் முயற்சி. ஐக்கிய நாடுகள் சபையின் காலனித்துவத்தில் இருந்து விடுதலை பெறுவது தொடர்பான அனைத்து சாசனங்களும் சட்டங்களும் தமிழர் பிரச்சினையைப் பொறுத்த மட்டில் ஏற்புடையனவாகத் திகழ்கின்றன.

தமிழர்களின் விடுதலை மீதான உறுதியையும் தமிழீழ விடுதலைப் புலிகள் என்னும் அவர்களின் தேசித் தலைமையையும் இராணுவ வாதத்தால் வெற்றிகொள்ள முடியவே முடியாது.என்பது சமகால வரலாறு எடுத்துரைக்கும் மகத்தான உண்மை.

மேலும், சிங்களப் பெரும்பான்மை இலங்கை அரசாங்கத்திற்கு காலனித்துவம் வழங்கிய அரசியல் அதிகாரத்தை சிங்களத் தலைமைகள், பேரினவாதத்தை வளர்ப்பதற்கான சட்ட அந்தஸ்தாகக் கொண்டு செயற்பட்டனர். 1948 முதல் 1972 வரை பல்வேறு வகையான சட்டங்களைத் தாயாரித்து தமிழர் தாயகத்தின் தனித்துவத்தையும் தமிழ்மக்களின் பிரநிதித்துவ விகிதாசாரத்தையும் அழிப்பதற்கான அனைத்து முயற்சிகளிலும் இறங்கினர். பெரும்பான்மையினரின் பாராளுமன்றக் கொடுங்கோன்மை என்பதற்கு இலங்கை அரசாங்கத்தை உதாரணமாக மாற்றி ஜனநாயக ஆட்சி என்ற தத்துவத்தையே சாகடித்தனர். காலனித்துவத்தில் இருந்து சுதந்திரத் திற்காகப் போராடிய இலங்கைத் தமிழர்கள் மேல் நவகாலனித்துவ ஆட்சியினைத் தோற்றுவித்தனர்.

இதன் உச்ச விளைவாக தமிழ்த் தேசிய இனமும் சிங்களத் தேசிய இனமும் ஒற்றையாட்சி ஜனநாயக ஆட்சியில் தமது இறைமைகளைப் பொதுவாக கொண்டு செயற்படுவதற்கான சோல்பரி அரசியல் அமைப்பின் 29(2) விதியை வன்முறைப்படுத்தி சிங்கள பௌத்த பேரினவாதம் சிறீலங்கா என்னும் அந்நிய அரசை உருவாக்கினர். தமிழர்கள் இதனை ஏற்க மறுத்து தமது பிரிக்க முடியாத உரிமையான சுயநிர்ணய உரிமையைக் கொண்டு தமது இறைமையினை சிங்களத் தேசியத்தின் இறைமையுடன் பொதுவாக வைத்து காலனித்துவம் உருவாக்கிய ஒற்றையாட்சி முறைமையில் இருந்து விலகி, தமது பாரம்பரிய வரலாற்றுத் தாயகமான தமிழீழத் தாய்கத்தை மீள அமைக்கப் புறப்பட்டனர். இந்த சர்வதேச சட்டங்களுக்கு இயைபான தமிழர்களின் சுயநிர்ணய உரிமைப் பிரகடனத்தை ஏற்க மறுத்த சிறீலங்கா முழுஅளவிலான இராணுவவாதத்தை தமிழர்கள் மேல் கட்டவிழ்த்து விட்டது.

தமிழர்களின் விடுதலை மீதான உறுதியையும் தமிழீழ விடுதலைப் புலிகள் என்னும் அவர்களின் தேசித் தலைமையையும் இராணுவ வாதத்தால் வெற்றிகொள்ள முடியவே முடியாது என்பது சமகால வரலாறு எடுத்துரைக்கும் மகத்தான உண்மை.

தமிழர்கள், சிறீலங்கா என்னும் அந்நிய அரசு அரச பயங்கரவாதத்தின் மூலமும் படைபல பிரயோகங்கள் மூலமும் தம்மேல் மேற்கொள்ளத் தொடங்கிய இனஅழிப்பு- இனத் துன்புறுத்தல்களுக்கு எதிராக தம்மைப் பாதுகாக்கவும் தமது தமிழீழத் தேசத்தை மீளமைத்து பாதுகாப்பான அமைதியுடன் வாழவும் ஆயுத எதிர்ப்பை ஆரம்பித்தனர். சிறீலங்கா யுத்தப்பிரகடனம் செய்ததை அடுத்து-தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டமாக அதனை முன்எடுத்து வருகின்றனர். தமிழர்களின் விடுதலை மீதான உறுதியையும் தமிழீழ விடுதலைப் புலிகள் என்னும் அவர்களின் தேசித் தலைமையையும் இராணுவ வாதத்தால் வெற்றிகொள்ள முடியவே முடியாது என்பது சமகால வரலாறு எடுத்துரைக்கும் மகத்தான உண்மை. இதனால் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தை மூலமே தமிழர் பிரச்சினைக்கான தீர்வு எய்தப்படல் வேண்டும் என்பது அனைவரும் அறிந்த தீர்வுத் திட்டமாக உள்ளது. ஆனால் இதனை செய்வதாக சிங்கள மக்களின் ஆணையைத் தேர்தல் மூலம் பெற்று ஆட்சி அமைத்த சந்திரிகா பண்டாரநாயக்கா வேதாளம், மறுபடி முருங்கை மரம் ஏறிய கதையாக முன்னையை விட மிகமிக மோசமான இராணுவ வாதத்தைக் கட்டவிழ்த்து விட்டமை உலகறிந்த ஒன்று. இதனால் தமிழீழ மக்களின் தமிழீழத் தேசவிடுதலை மீதான உறுதியையோ அல்லது தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்ட வலிமையையோ எதுவும் செய்ய முடியவில்லை. மாறாக சிங்களத் தேசத்தையும் சிங்கள மக்களையும் மீள முடியாத இராணுவ மேலாண்மைக்குள் தள்ளியுள்ளது.

உதாரணமாக, இன்று கொழும்பில் சகல நிலைகளிலும் இராணுவத்தினர், சிறீலங்கா அரசுத் தலைமைகளின் கட்டளைகளை மேலாண்மை செய்வதைக் காணக் கூடியதாக உள்ளது. போக்குவரத்து ஏற்பாடுகள் முதல் பள்ளிக்கூடங்களை நடாத்துவது வரை, சர்வதேசப் பத்திரிகைகாரர்கள் வீட்டுக்குள் புகுவது முதல் விடுதிகளில் பணம் செலுத்தி தங்கி சகலவிதமான பதிவு ஆவணங்களுடன் உள்ளவர்களை இழுத்து தெருவில் நிறுத்துகிற வரை எல்லாமே இராணுவத்தினரின் விருப்புப்படியே செய்யப்படுகின்றன. சிறீலங்கா அரசாங்கத்தின் மக்கள் பிரதிநிதிகளாகத் தேர்தலால் தெரிவான அனைவருமே இராணுவத் தினரைப் பொறுத்த வரை செல்லாக்காசுகள். சிறீலங்கா இராணுவத் தினர்க்கு எதிராக எதையுமே செயலளவில் செய்யும் சக்தி அவர்களுக்கு இல்லை. இராணுவம் செய்வதற்குத் தலையாட்டும் ஒரு ஆட்சியை உலகநாடுகள் இன்னும் ஜனநாயக ஆட்சி என அழைப்பது வேடிக்கையானது மட்டுமல்ல.. வேதனையானதும் கூட

இவ்வாறு இராணுவவாதம் சிங்கள மக்களின் ஜனநாயகத்தினை மறுத்துள்ள இன்றைய சூழலில் சிறீலங்காவின் இராணுவவாதத்தை வெற்றி கொண்டு தமிழீழ மக்களுக்கு மட்டுமல்ல சிங்கள மக்களுக்கும் ஜனநாயகத்தை, அமைதியை மீட்டெடுத்துக் கொடுக்கும் தன்மையான போராட்டமாக தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டம் திகழ்கிறது.

இதனால் இப்போராட்டம் வெற்றிபெற்றால் பின்னர் இராணுவவாதத்தை கொண்டு தொடர வழியில்லாது போய் விடும் என சிறீலங்காவின் இராணுவவாதிகள் பரிதவிக்கின்றனர். இராணுவவாதத்தினால் வயிறு வளர்க்கும் உள் நாட்டு - வெளி நாட்டு ஆயுத தரகர்கள் எப்படியாவது இந்த தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தின் வெற்றியைத்தடுக்கப் பகீரதப்பிரயத்தனம் செய்து வருகின்றனர். இந்த இராணுவ வாதம் சிறீலங்காவில் தொடரும் வரை தமிழர் பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு என்பது இவ் இராணுவ வாதிகளால் ஒருபொழுதும் அனுமதிக் கப்படாது என்பது தெட்டத்தெளிவான உண்மை.

அவ்வாறாயின் இலங்கைத்தீவைப் பிடித்தாட்டிப் படைத்துக் கொண்டு இருக்கும் இந்த இராணுவவாதத்தில் இருந்து தீவு விடுதலை பெறுவதற்கு ஏதாவது வழியில்லையா என்ற கேள்வி எழுகிறது. ஒரே ஒரு வழி, எந்த தமிழர் பிரச்சினையைச் சாட்டாக வைத்து இந்த இராணுவவாதிகள் இலங்கைத்தீவின் அழகை- அமைதியை குலைக் கின்றார்களோ அந்தப் பிரச்சினை- அரசியல் பிரச்சினை- அதற்கு அரசியல் தீர்வு தான் வழியே தவிர இராணுவத்தீர்வு அல்ல என்பதைத் தெட்டத் தெளிவாக வெளிப்படுத்த வேண்டும்.

இதற்கு உடனடித் தேவையாக இருப்பது தமிழ் மக்களின் வீடுகள் பள்ளிகள் தெருக்கள் வர்த்தக நிலையங்கள் வைத்திய சாலைகள் எங்கும் ஆக்கிரமிப்புச் செய்து நிற்கும் சிறீலங்காப் படைகளின் வில்கல். ஆம்! தமிழ் மக்கள் சிறீலங்கா இராணுவத்தினால் எப்படியும் நடாத்தப்படலாம், அவர்களது உயிர்களுக்கோ உடமைகளுக்கோ என்ன தீங்கு விளைத்தாலும் கேட்பார் யாரும் இல்லை என்ற நிலை தொடருமட்டும் இராணுவவாதம் தான் சிறீலங்காவின் அரசியல் செலுத்துகையாகத் திகழ்வது மாறப்போவதில்லை. தமிழ் மக்களின் உயிருக்கும் உடலுக்கும் உடமைக்கும் தானே ஆபத்து என சிங்களத் தேசியம் கைதட்டி மகிழ்ந்ததின் விளைவாக இன்று இலங்கைத்தீவு முழுவதுமே இராணுவ வாதத்துள் மூழ்கி விட்டது. இந்நிலையில் தற்பொழுது இலங்கைத்தீவில் அமைதிப் பேச்சுவார்த்தை ஒன்று ஏற்படுவதென்றாலோ அல்லது தமிழர் தாயகத்தில் தமிழ் மக்களை ஆக்கிரமித்து நிற்கும் சிறீலங்காப் படையினர் விலகுவதென்றாலோ அதற்கான எத்தகைய முயற்சிகளையும் இராணுவவாதம் அனுமதிக்க மாட்டாது என்பது ஊரறிந்த உண்மை. இந்நிலையில் சர்வதேச அழுத்தங்கள் மூலமே படைவிலகல் சாத்தியமாக முடியும். அப்பொழுது தான் சிறீலங்கா அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைக்கான சூழ்நிலை தோற்றம் பெறும். ஏற்படக் கூடிய அத்தகைய பேச்சுவார்த்தைகளும் கூட மூன்றாம் தரப்பு மத்தியத்தத்தினுடன் நடைபெற்றாலே குறித்த ஏதாயினும் இலக்கை எய்தும் என்பது கடந்த கால அனுபவங்களாக உள்ளன.

இவைகளெல்லாம் நடைமுறைச் சாத்தியமாவதற்கு தமிழீழ மக்களின் மக்கள் அமைப்பான தமிழீழ விடுதலைப் புலிகள் மேலும் மேலும் பலம் பெற வேண்டிய தேவை தவிர்க்க முடியாத ஒன்று. தமிழீழ மக்கள் தங்கள் உயிரை உடலை உடைமைகளைத் தேச விடுதலைக்காக அர்ப்பணித்து நிற்கும் இந்நேரத்தில் தமிழீழ புலம்பெயர் மக்களாகிய நாம் எமது தாயக விடுதலைக்காக - எமது உழைப்பை நல்காது இருப்போமாயின் நாம் தமிழர்களாக இருக்க முடியாது. இதனை மனதிலிருத்தி தமிழீழ புலம்பெயர் மக்களாகிய நாம் எம்மாலான வழிகளில் எல்லாம் உதவி, எமது மண்ணை ஆக்கிரமித்து எமது மக்களின் நாளாந்த வாழும் உரிமைகளை மறுத்து அவர்களை அனுதினமும் இனக் கொலைகள் செய்துசாகடிக்கும் சிறீலங்கா படையினரை ஓடவிரட்டும் தமிழீழ விடுதலைப் புலிகளை - எமது தமிழீழத் தேசத்தலைமையைப் பலப்படுத்துவோமாக!. அதுவே இலங்கைத் தீவில் அமைதி மீள்வதற்கு ஒரே வழி.

— சு.யோ.பற்றிமாகரன்

# இனப்பிரச்சினை மறந்து.. ஜெயசிக்குறு என்பதே இன்றைய இலக்கு!

மூன்றாம் கட்ட யுத்தம் ஆரம்பமாகி மூன்று வருடங்கள் முழுமையாகக் கடந்துவிட்டன. முறுக்கேறிக் கிடந்த பேச்சுவார்த்தை முரண்பாடுகள் முற்றி, உடைத்துக்கொண்டு ஒரு பெரும் மூன்றாம் கட்ட யுத்தத்தை தோற்றுவித்துவிட்டு, ஜனாதிபதி சந்திரிகாவும் அவரது பிரதிப்பாதுகாப்பு அமைச்சரும் இராணுவப் பரிவாரங்களும் கொடுத்த அதிகபட்ச காலக்கெடு ஒரு வருடம்.

ஜெயசிக்குறுவின் குறிக்கோள் மறக்கப்பட்டு, மாங்குளம் என்பதே பிரதான வெற்றியின் இலக்கு என்பது போன்ற மாயை தோற்றமெடுத்துள்ளது. சிங்கள இராணுவத்தினர் மத்தியிலும், சிங்கள மக்கள் மத்தியிலும் இந்த மாயை கிளைத்து நிற்கக் காரணம், அந்த அளவிற்கு மாங்குளம் நோக்கிய சிங்களப் படையின் நகர்வு பல தடவைகள் விடுதலைப் புலிகளால் நொறுக்கப்பட்டிருக்கின்றன என்பதே.

1995ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் பத்தொன்பதாம் திகதி, மூன்றாம் கட்ட யுத்தம் ஆரம்பமாகியதில் இருந்து, சிங்களம் ஓயாமல் பொய்சொல்லிச் சொல்லியே காலத்தை ஓட்டி வந்திருக்கின்றது. ஒரு வருடத்தில் யுத்தமும் முடிவடையும் இனப் பிரச்சினையும் முடிவடையும் என்பது சிங்களத்தின் அன்றைய அறிவிப்பு. விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொண்டாலும் ஏற்றுக் கொள்ளா விட்டாலும் இனப் பிரச்சினைக்கான தீர்வை அமுல்படுத்தியே தீருவோம் என்பதும் சந்திரிகா அரசின் அன்றைய பிரகடனமாக இருந்தது. விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்தி, தமது தீர்வுத் திட்டத்தை ஏற்கப் பண்ணுவது என்பதே அவர்களது திட்டமாக இருந்தது.

எல்லாம் புஸ்வாணமாகி, இன்று பெரும் அழிவையும் அவலத்தையும் ஏற்படுத்தி, ஆளமான வடுவைப் பதித்துக்கொண்டு, யுத்தம் மூன்றாண்டுகளைக் கடந்துள்ளது. தற்போது அரசாங்கத்தின் காலக்கெடு வெற்றி நிச்சயம் என்ற ஜெயசிக்குறுவின் தலைவிதி குறித்தானது. இனப்பிரச்சினையை தீர்ப்போம் என்று முழங்கிய சிங்கள அரசாங்கம் இன்று முழங்குவது ஜெயசிக்குறு பற்றி – புளியங்குளத்தைப் பிடிப்போம் – கனகராயன் குளத்தைப் பிடிப்போம் – மாங்குளத்தை விரைவில் பிடிப்போம் என்பதே சிங்களத்தின் அண்மைய கூப்பாடுகள். அடுத்த இரு வாரத்துடன் ஒரு வருடத்தைப் பூர்த்தி செய்யும் ஜெயசிக்குறுவின் தலைவிதி குறித்தே சிங்களம் இப்போது கவலைப்பட்டுக் கொண்டிருக்கின்றது. வவுனியா கிளிநொச்சி பிரதான வீதியில், மாங்குளத்தைப் பிடிப்பதே மாபெரும் சாதனையாக பிரச்சாரப்படுத்தப்பட்டுள்ளது. ஜெயசிக்குறுவின் குறிக்கோள் மறக்கப்பட்டு, மாங்குளம் என்பதே பிரதான வெற்றியின் இலக்கு என்பது போன்ற மாயை தோற்றமெடுத்துள்ளது. சிங்கள இராணுவத்தினர் மத்தியிலும், சிங்கள மக்கள் மத்தியிலும் இந்த மாயை கிளைத்து நிற்கக் காரணம், அந்த அளவிற்கு மாங்குளம் நோக்கிய சிங்களப் பண்டயின் நகர்வு பல தடவைகள் விடுதலைப் புலிகளால் நொறுக்கப்பட்டிருக்கின்றன என்பதே.

**விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்தி, தமது தீர்வுத் திட்டத்தை ஏற்கப் பண்ணுவது என்பதே அவர்களது திட்டமாக இருந்தது**

சுப்பு

ஜெயசிக்குறு படை நகர்வில், பல தடவைகள் விடுதலைப் புலிகளின் ஊடறுத்துத் தாக்குதல்களையும், நேரடி எதிர்த் தாக்குதல்களையும் சிங்களப்படை சந்தித்துள்ளபோதும், மாங்குளம் நோக்கிய நகர்வு பெரும் அழிவையே அடிக்கடி ஏற்படுத்தியுள்ளன. சாண் ஏற முழம் சறுக்குவதுபோல எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும், பெரும் இழப்பை ஏற்படுத்துவதிலேயே போய்க் கொண்டிருக்கின்றது. கடந்த தை மாதத்திற்கு முன்பிருந்தே, இதோ – மாங்குளம் இன்னும் ஓரிரு நாட்களில் நம் படைவசம் என்றெல்லாம் சிங்களப் படைத் தலைமை பசப்பி வந்து கொண்டிருக்கின்றது.

விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் வேகமாக குடா நாட்டில் அதிகரித்து வருகின்றன. சந்திரிகா அரசு யுத்தத்தை விரித்து அழிவைப் பெருக்கிக் கொண்டிருக்கின்றது. கைவிடப்படமுடியா பெரும் இக்கட்டில் அது மாட்டிக் கொண்டிருக்கின்றது.

சமாதானம் பேசி ஆட்சிக்கு வந்த சந்திரிகா அம்மையார் ஆட்சிக்கு வருவதற்கு முன்னால், 1993ம் ஆண்டு இருந்த மொத்த ஆயுதப் படையினரின் எண்ணிக்கையிலும் கடந்த ஆண்டு வரை ஒரு இலட்சம் பேர் மேலதிகமாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றார்கள் என, முன்னாள் விமானப்படைத் தளபதி கரிகுணத்திலகா தெரிவிக்கின்றார்.

சிங்களப் படையின் கட்டுமீறிப் போய்க் கொண்டிருக்கும் இழப்பை தடுத்து நிறுத்துவது என்பது முடியாத காரியம். அதனால் சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சகம்; விடுதலைப் புலிகளின் இழப்பை தம் விருப்பத்திற்கு அடிக்கடி அறிவித்து வருகின்றது. அங்கு ஐவர் இங்கு அறுவர் என்று கதை விடுகின்றது. விமானப்படை– புலிகளின் தளத்தை அழித்தது, கடற்படை – புலிகளின் படகுகளை எரித்தது என்றெல்லாம் கதை அளக்கின்றது. ஆட்டிலறி ஏவி இறந்த புலிகளின் கணக்குகளைக்கூட துல்லியமாக அறிவிக்கின்றது சிங்களப்படை. ஆனால், தமது தரப்பு இழப்புக் குறித்து வாய் திறப்பதில்லை.

தமது தரப்பு இழப்பை குறைத்துக் காட்ட எதிரியின் இழப்பை பல மடங்காக்கிச் சொல்லுவது தந்திரம்போலும். இது வெறுமனே சிங்கள மக்களை மடையர்களாக்கும் முயற்சி. அல்லது அறிவற்ற சிங்களத் தீவிரவாதிகளை குசிப்படுத்தும் முயற்சி. இதைத்ததவிர இந்தப் பொய்க்கதைகளில் வேறேதும் பலன் இருப்பதாகத் தெரியவில்லை.

பொய்க்கும் புனை கதைகளுக்கும் முன்னைய ஆட்சியில் நன்கு பயிற்றப்பட்ட சிறீலங்கா இராணுவப் பேச்சாளர் சரத் முனசிங்கா இப்போதும் தன் பணியைப் பொறுப்புடன் செய்து வருகின்றார். சிங்கள அரசாங்கத்தை தாங்கி நிற்கும் ஒரு தூணாகவே அவர் சிங்களத்திற்கு காட்சியளிக்கின்றார். கடந்த ஏப்பிரல் மாதத்தில் மட்டும், 200 புலிகள் களத்தில் கொல்லப்பட்டதாக அவரது அறிக்கைகன் தெரிவிக்கின்றன. விடுதலைப் புலிகளின் பத்துக்கு மேற்பட்ட படகுகள் அழிக்கப் பட்டதாகவும் அவரது அறிக்கைகள் தெரிவிக்கின்றன. தினமும் இரண்டு மூன்று புலிகளையாவது தனது அறிக்கை மூலம் கொல்லாமல் அவர் நித்திரை கொள்வதில்லைப்போலும்.

நாட்டு விசுவாசத்துடன் கூடிய அவரது வாழ்க்கைப் பிரச்சினை என அதனை விட்டுவிடலாம். ஆனால், அவரது பிதற்றல்களைச் செய்திகளாக்கும் பிற நாட்டுச் செய்தி நிறுவனங்கள்தான் பாவம் பரிதாபத்துக்கு உரியவை.

இன்று யாழ் குடாநாட்டில், தினமும் ஒரு இராணுவத்தினனாவது கொல்லப் படுகின்ற நிலைமை ஆகிவிட்டது. விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் வேகமாக குடா நாட்டில் அதிகரித்து வருகின்றன. சந்திரிகா அரசு யுத்தத்தை விரித்து அழிவைப் பெருக்கிக் கொண்டிருக்கின்றது. கைவிடப் படமுடியா பெரும் இக்கட்டில் அது மாட்டிக் கொண்டிருக்கின்றது.

சமாதானம் பேசி ஆட்சிக்கு வந்த சந்திரிகா அம்மையார் ஆட்சிக்கு வருவதற்கு முன்னால், 1993ம் ஆண்டு இருந்த மொத்த ஆயுதப் படையினரின் எண்ணிக்கையிலும் கடந்த ஆண்டு வரை ஒரு இலட்சம் பேர் மேலதிகமாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றார்கள் என, முன்னாள் விமானப்படைத் தளபதி கரிகுணத்திலகா தெரிவிக்கின்றார்.

இராணுவம், கடற்படை, ஆகாயப்படை, பொலிஸ், அதிரடிப்படையினர் என, 1993ம் ஆண்டு 158,600 பேராக இருந்த எண்ணிக்கை, 1997ம் ஆண்டு 247,500ஆக உயர்த்தப்பட்டிருப்பதாக அவர் தெரிவிக்கின்றார்.

இதிலிருந்து சந்திரிகா அரசு சமாதானத்தின் மேல் கொண்டுள்ள பற்றுறுதி எவ்வகை என்பது அப்பட்டமாக வெளிப்படுகின்றது. படிப்படியாக ஒரு பெரும் யுத்த ஆயுதங்களிலேயே சந்திரிகா அரசு கவனம் செலுத்தி வந்திருக்கின்றது. பேச்சுவார்த்தைக் காலத்திலும் அது அதையே புரிந்தது. சமாதானம் பற்றிப் பேசுகின்ற இப்போதும் அது அதனையே செய்கின்றது. அது அப்போதும் இப்போதும் எப்போதும் அதனையே செய்யும்.

தமிழ் மக்கள் மீதான இக் கொடூரமான இன அழிப்பு யுத்தத்தை ஆரம்பத்தில் இருந்தே திட்டமிட்டு நடத்திவரும் சந்திரிகா அரசை, உச்சி மோர்ந்து முதுகில் தட்டி உற்சாகப்படுத்தி, இனப் பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் சந்திரிகா அரசு சரியான பாதையில்தான் செல்கின்றது எனக் கூற, விகாரமான மனோ நிலையும் கொடூரமான சிந்தனையும் தேவை. அதை சந்திரிகாக்களின் எஜமானர்கள் நிரம்பவே கொண்டுள்ளனர் போலும். ☐

## வவனியாவில் இராணுவஆயுதக்குதம் தீயிலெரிகிறது

வவனியா விமானப்படைத் தளத்துடன் இணைந்த பகுதியில் அமைக்கப்பட்டிருந்த சிறீலங்கா ஆயுதக்குதம், தீப்பற்றி வெடித்தெரிந்து கொண்டிருப்பதாக இப்பத்திரிகை அச்சுக்குப் போகும் பொழுது கிடைத்த செய்தியொன்று தெரிவிக்கிறது. மதியம் 12.45 மணியளவில் பலத்த வெடிச்சத்தங்களுடன் எரியத் தொடங்கிய இவ்வாயுதக் குதம் மாலை வரை எரிந்து கொண்டிருந்தாகவும் அங்கிருந்த வாகனங்களும் எரிந்து சாம்பலாகியுள்ளதாகவும் அச்செய்தி தெரிவிக்கின்றது.

# எங்கள் தமிழினம் மாளலாமா? அதுவே சரியென சந்திரிகா ஆளலாமா?

சந்திரிகா அம்மையாரின் சமாதான த்திற்கான யுத்தம் - பாதை திறப்புக்கான யுத்தம் என்ற கோஷங்களுடன் ஆன தமிழர் தாயகம் மீதான ஆக்கிரமிப்புக்களால் தமிழ்ப் பொது மக்கள் எவ்வாறு வாட்டி வதைக்கப்படுகின்றனர் என்பதற்கு உதாரணமாக தமிழ் மக்கள் படும் துன்பங்களில் சிலவற்றை இங்கே தொகுத்து தருகின்றோம்.

### மாவடி வேம்பு பகுதியில் படையினர் சுட்டதில் இரு தமிழ்பொது மக்கள் தலை சிதறிச் செத்தனர்

மட்டக்களப்பு மாவட்டம் மாவடி வேம்புப் பகுதியில் சிறீலங்கா அதிரடிப்படையினர் தமிழ்ப் பொது மக்கள் மீது கண்மூடித்தனமாகச் சுட்டதில் இருவர் தலைசிதறி - துடிதுடித்து இறந்துள்ளனர்.

இவர்களின் உடல்களை ஏறாவூர் வைத்திய சாலையில் ஒப்படைத்த படையினர் வழமை போல் தாம் இரு புலிகளைச் சுட்டுக் கொன்று உள்ளதாக தகவல் வெளியிட்டுள்ளனர்.

இச் சம்பவத்தின் பொழுது மேலும் பலரும் காயமடைந்தனர் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சிறீலங்கா அதிரடிப்படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு ஏப்ரல் மாதம் 28ம் திகதியன்றும் நான்கு பிள்ளைகளின் தந்தையான 43 வயதுடைய ராமமுத்து வேலுப்பிள்ளை விறகு சேகரிக்கச் சென்ற போது பலியாகியுள்ளார்.

இதற்கிடையே மட்டக்களப்பு மாவட்ட கிராமசேவகர்களை - மட்டக் களப்பிலிருந்து வெளியிடங்களுக்குச் சென்று வருபவரின் பெயர் பட்டியல் களை உடன் தயாரிக்குமாறு

சிறீலங்கா அதிரடிப்படையினர் உத்தர விட்டுள்ளதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### புலிவேட்டை என்ற பெயரில் திருமலை மக்கள் விரட்டியடிப்பு

திருகோணமலையில் புலிவேட்டை என்ற பெயரில் சிறீலங்கா மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையை தாம் நிறுத்தி விட்டதாக சிறீ லங்கா அறிவித்துள்ளது. இவ் இராணுவ நடவடிக்கை மூலம் கதிரவெளி , பாலச்சேனை, வாகரை வடக்கு பிரதேசங்களில் வாழ்ந்த தமிழ் மக்கள் வீடுவாசல்களை விட்டு விரட்டப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இது ஒருபுறமிருக்க ஏப்ரல் 27ம் திகதி கிண்ணியாக் கடலேரியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இரு முஸ்லிம் மீன வர்கள் சிங்களப் படையினரால் சுடப்பட்டதாகவும் அதில் இரு மீனவர்களுமே உயிரிழந்த போதிலும் ஒருவரின் உடல் மட்டுமே மீட்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

### கால்நடைக்குப் புல்லு வெட்டப்போனவர் ஆனையிறவு முகாமில்

ஏப்ரல் 13 ம் திகதி கால்நடைக்குப் புல்லு வெட்டவெனப் புறப்பட்டுச் சென்ற கிளிநொச்சி மாவட்டம் - கண்டாவளை, மடுக்கரையைச் சேர்ந்த முப்பத்தெட்டு வயதான ஆறுமுகம் கோவிந்தநாதனை மறைந்திருந்த சிறீலங்கா இராணுவத்தினர் கைது செய்து தமது இராணுவ முகாமிற்கு கொண்டு சென்றுள்ளனர். இவர் சிறீலங்காவின் ஆனையிறவு முகாமில் அடைக்கப்பட்டுள்ளதாக நம்பப்படுகிறது.

### அன்று கைது செய்யவில்லை என்றனர் இன்று வெலிகடை சிறையில் உள்ளனர்

யாழ் - நீராவியடி பிறவுண் வீதியைச் சேர்ந்த பத்தொன்பது வயதான பாலசிங்கம் சியாமளா, அவரது சகோதரியான பதினேழு வயது கல்பனா ஆகியோர் யாழ்நகரில் வைத்து சிறீலங்கா இராணுவத்தால் கைது செய்யப்பட்டனர். இதனைக் கேள்வியுற்ற இவர்களின் பெற்றோர் அச்சமயம் சிறீலங்கா இராணுவ முகாம்களுக்குச் சென்று கேட்டபொழுது அப்படி யாரையுமே தாங்கள் கைது செய்யவில்லை என இராணுவத்தினர் வன்மையாக மறுத்து விட்டனர்.

ஆனால், தற்போது இச் சகோதரிகள் இருவரும் வெலிகடைச் சிறையில் வாடுவது தெரியவந்துள்ளது. அவ்வாறு அன்று கைதாக்கப்பட்டு இராணுவத்தால் விவரம் கூறாது மறுக்கப்பட்ட இதே இடத்தைச் சேர்ந்த முப்பத்தெட்டு வயதான சின்னத்துரை ஞானசேகரம் என்பவர் களுத்துறைச் சிறையில் அடைக்கப்பட்டிருப்பதும் தற்பொழுது தெரியவந்துள்ளது. சிறீலங்காப் படையினர் சர்வதேச சட்டங்களுக்கும் மனிதாயத்திற்கும் எதிரான வகையில் கைதாக்கப்படும் தமிழ் மக்களை தமது அடிமைகள் போல் நடாத்தி வருகின்றனர்.

### தமிழர்கள் சிறீலங்கா இராணுவத்தால் எலும்புக் கூடுகள் ஆக்கப்படுகின்றனர்

அம்பாறை மாவட்டத்தின் காட்டுப் பகுதியில் இரு எலும்புக் கூடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. தாண்டியடி காட்டுப்பகுதியில் காணப்பட்ட எலும்புக் கூடு 25 வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவருடையதாக இருக்கலாம் என கருதப்படுகிறது. ஆனால், செங்கா மாங்காட்டுப் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட எலும்புக்கூடு பற்றிய விபரங்கள் இன்னும் அறியப்பட முடியாதுள்ளது.

இதேபோன்று சங்கமன்கண்டி காட்டுப்பகுதியில் பிறிதொரு எலும்புக் கூடு, மார்ச் மாதத்தில் கண்டெடுக் கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இவைகள் சிறீலங்கா இராணுவத்தால் எலும்புக் கூடாக்கப்படும் தமிழர் களுடையதாக இருக்கலாம் என்று இப்பகுதி மக்களால் நம்பப்படுகிறது.

### சுற்றி வளைப்புகளுக்கு நடுவே பொதுமக்கள் அவலம்

யாழ் - தென்மராட்சிப் பகுதியில் உள்ள கைதடி, நுணாவில், மட்டுவில் கிராமங்களைச் சுற்றிவளைத்த சிறீலங்காப் படையினர் அதிகாலை முதல் மாலை வரை வீடு வீடாக சோதனை நடாத்தி பல ஆண்களையும் பெண்களையும் கைது செய்தனர். இவர்களில் எவரும் விடுதலை செய்யப்படாமல் இராணுவ முகாங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு விட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கல்முனை அக்கரைப்பற்று பகுதியில் சிறீலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றி வளைப்பு தேடுதலில் 32 இளவயதினர் கைதாக்கிச் கொண்டு செல்லப்பட்டதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

### திருமலையில் பரவும் வைரஸ் காய்ச்சல்

திருகோணமலை நகரப் பகுதிகளில் இனங்காண முடியாத வைரஸ் காய்ச்சல் ஒன்று மக்களைத் தாக்கி வருவதாக வைத்திய அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இதன் தாக்கத்தால் 74 வயதுடைய ஒருவர் பாலத் தோட்டப் பகுதியில் உயிரிழந்துள்ளார். இன்னுமொரு 14 வயது சிறுவனும் இக்கடுங் காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளார். இக்காய்ச்சல் பரவுவதை சிறீலங்காவின் மருந்து தடை காரணமாக எதுவும் செய்ய முடியாது இருப்பதாக திருமலை வைத்தியசாலையைச் சேர்ந்த மருத்து வர்கள் கடுங் கவலை தெரிவித்துள்ளனர்.

### களுத்துறையில் குண்டு வெடித்ததற்கு தமிழ் பொறியியலாளர் கைது

களுத்துறையில் சமீபத்தில் நடந்த குண்டு வெடிப்பு தொடர்பாக தமிழ்ப் பொறியியலாளர் ஒருவரை சிறீலங்காப் படையினர் கைது செய்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. முன்னைய அனுபவங்களின் அடிப்படையில் இவர்மீது மேலும் அபாண்டமான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி அதற்கேற்ப சாட்சியங்களை ஜோடிக்கின்ற வேலையில் சிறீலங்காப் பொலிசார் ஈடுபட்டுள்ள தாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

### விடுதலையானவர் சில தினங்களில் தன்னுயிரை இழந்தார்

மட்டக்களப்பு வீரமுனையைச் சேர்ந்த 52 வயதுடைய முருகுப்பிள்ளை செல்லத் துரை என்பவர் சிறீலங்காப் படையினரால் கைது செய்து கொண்டு செல்லப்பட்டு விடுவிக்கப்பட்டார். ஆனால், விடுதலை யாகி சில தினங்களுள் உயிரிழந்தார். இவரது மரணத்திற்கு சிறீலங்காப் படையினர் ஏற்படுத்திய உட்காயங்களே காரணமென உடலைப் பரிசோதனை செய்ததின் மூலம் தெரிய வந்துள்ளது.

### கொழும்புக்குப் பயணம் செய்தோர் கைது

வவுனியாவில் இருந்து கொழும்புக்குச் சென்ற தமிழ்ப் பொதுமக்கள் சிறீலங்கா இராணுவ உளவுப் பிரிவினரால் கைதிகளாக்கப்பட்டுள்ளனர். மூன்று பெண்களும் நான்கு ஆண்களும் இவ்வாறு நடமாடும் சுதந்திரம் மறுக்கப்பட்டவர்களாக சிறைப் பிடிக்கப்பட்டுள்ளனர். இலங்கைத் தீவு முழுவதிலுமே தமிழர்களைச் சந்தேகக் கண்கொண்டு பார்க்கும் சிறீலங்கா தமிழர்களுக்கும் தான் அரசாங்கம் என்று கூறுவது வரவர அர்த்தமற்ற ஒன்றாகி வருகிறது. சிறீலங்கா, செயலளவில் தமிழர்களை பகை நாடொன்றின் குடிகளை நடாத்துமாற் போலவே நடாத்தி வருகிறது என்பதற்கு இது ஒரு தலைசிறந்த எடுத்துக்காட்டாக உள்ளது.

### முல்லை மண்ணில் முதல் மூன்று மாதத்தில் இருபத்தி நான்கு தமிழர்கள் கொலை

இவ்வாண்டின் முதல் மூன்று மாதத்தில் முல்லை மண்ணின் கரையோரக் கிராமங்கள் மீதும் மீனவர்கள் மீதும் சிறீலங்காப் படையினர் நடாத்திய தொடர்ச்சியான தாக்குதல்களினால் இருபத்தி நான்கு தமிழ் மக்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் இம் மூன்று மாதத்துள் மட்டும் இவர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட சொத்தழிவு பதினேழு இலட்சத்து முப்பத்தையாயிரம் ரூபாவெனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

இத் தகவல்களை மீனவர்கள் கூட்டமைப்பு வெளியிட்டுள்ளது. மீனவர்களின் படகுகள் வலைகள் மற்றும் மீன்பிடி சாதனங்கள் ,சிறீலங்காப் படையினரால் நாசமாக்கப்பட்ட விவரங்களையும் இக் கூட்டமைப்பு எடுத்து விளக்கியுள்ளது.

### கைதான கணவரைத் தேடிச் சென்ற மனைவியும் கைது

ஜெகசீலன் புவனேஸ்வரி என்ற 24 வயதான இருபிள்ளைகளின் தாய், சிறீலங்கா இராணுவத்தால் கைதான தன் கணவனைத் தேடி இராணுவ முகாமுக்குச் சென்றார். வலையிறவு பாலத்தைக் கடந்து செல்கையில் இவரையும் கைது செய்த சிறீலங்காப் படையினர் கணவனை ஒரு இடத்திலும் மனைவியை வேறிடத்திலும் அடைத்து வைத்துள்ளனர். இரு பிள்ளைகளும் பெற்றோர்கள் இராணுவ முகாங்களில் அடைக்கப்பட்ட நிலையில் தவியாய்த் தவித்துக் கொண்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

### தமிழ்ப் புதுவருடத்தினத்தில் தமிழ்மகன் உயிர் குடித்தது இராணுவம்

தமிழர் புதுவருடத் தினமான ஏப்ரல் 12ம் திகதி அடம்பன் வீரியன் குளத்தில் 47 வயதான அந்தோனிப்பிள்ளை வில்வராசா தன் கால்நடைகளை மேய்ச்சலுக்கு கொண்டு சென்றார். ஆனால், சிங்களப் படையோ அவர் மீது துப்பாக்கி பிரயோகம் செய்து அவரைத் துடிக்கத் துடிக்க கொலை செய்தனர்.

### கடைக்குச் சென்றவர் கைதானார் விபரம் அறிய முடியாது தவிப்பு

வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த 24 வயது வீரபாகு சிவலோகநாதன், பொருட்கள் வாங்கி வரவென மன்னார் சென்றார். ஆனால், சிங்களப் படை இவரைக் கைதாக்கி எங்கோ கொண்டு சென்று விட்டது. இவரைப் பற்றிய தகவல்களை அறிய முடியாத நிலையில் இவரின் கிட்டிய உறவினர்கள் தவித்து வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி 7ம் பக்கம்......

# கந்தளாயில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம்

## சிறீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர் பொறுப்பாளராக நியமனம்

திருகோணமலை தமிழர்களின் பூர்வீகத் தாயகம். ஹென்றி சார்ள்ஸ் சேர் (Henry Charles Sir) என்பவர் பிரித்தானிய காலனித்துவ காலத்தில் இலங்கையின் தென்பிராந்தியத்திற்கு மகாராணியின் உதவிச் சட்ட வல்லுனராகக் கடைமையாற்றியவர். இவர் 1850ல் எழுதிய சிலோன் அன்ட் த சிங்கடுஸ் என்னும் வரலாற்று நூலில் திருகோணமலையில் கி.பி.125 முதலே தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர் எனவும் திருகோணமலை தமிழர்களின் (மலபார்) நகரமாகத் திகழ்ந்தது எனவும் தெளிவாகக் குறிப்பிட்டுச் சொல்கின்றார்.

இவ்வாறு தமிழர்களின் பழம் பெரும் நகரான திருகோணமலை அதனது இயற்கைத் துறைமுகத்தினால் மத்தியதரைக் கடல் வழிப் பயணத்தில் முக்கிய கேந்திர நிலையமாகி இஸ்லாமியர், ஐரோப்பியருக்கு கடல்வழிப்பாதைகளை அடைத்த நேரத்தில், அவர்களது கவனத்தை ஈர்த்து அவர்களால் கைப்பற்றப்பட்டது. காலனித்துவ விலகலின் பின்னரும் சுயஸ்கால்வாய் பிரச்சினை உள்ளவரை திருகோணமலை கடல் வழிப் போக்குவரத்திற்கு முக்கியத்துவம் பெற்று விளங்கியதினால் 1956 வரை தொடர்ந்தும் பிரித்தானியாரின் தளமாக தொடர்ந்து பேணப்பட்டு வந்தது. அணுவாயுத பிரயோகத்திலும் கடல் வழிப் பூகோளத்தில் ரஷ்யா, சீனா ஆகிய இரு தேசங்களையும் ஏககாலத்தில் எறிகணை கொண்டு தாக்குவதற்கான புவியல் அமைப்பைக் கொண்டிருப்பதினால் திருகோணமலை வல்லரசுக்களின் கவனத்தைத் தொடர்ந்து பெற்றுவருகிறது. இந்திய உபகண்டத்தின் பாதுகாப்பிலும் திருகோணமலை முக்கிய இடம் வகிக்கின்றது.

இத்துனை முக்கியத்துவம் வாய்ந்த திருகோணமலையினை சிங்களப் பிரதேசமாக மாற்றுவது என்பது காலனித்துவ விலகலின் பின் சிங்களப் பெரும்பான்மை அரசுக்களின் தமிழர்களுக்கு எதிரான செயற்திட்டங்களில் முக்கியமானதாக செயற்படுத்தப் பட்டுவருகிறது. இதனால் தமிழர்களின் தாயகத்தில் சேருவாவல என்னும் ஒரு சிங்களத் தொகுதியே உருவாக்கப்பட்டமை வரலாறு. அதுவும் போதாது எனத் திருகோணமலைப் பாராளுமன்றத் தொகுதியிலும் சிங்களவர்களை பெரும்பான்மையினர் ஆக்குவதற்கான செயற்திட்டங்கள் தொடர்ந்தும் சிறீலங்காவால் செயற்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் இராணுவ அழுத்தங்களினால் தமிழர்களின் கடைவீதியாகத் திகழ்ந்த திருகோணமலைக் கடைத்தெருவில் இன்று சிங்களவர்களின் கடைகளே காணப்படுகின்றன.

மேலும் சந்திரிகாவின் இராணுவத் தலைமைகள் திருகோணமலையில் பல இடங்களில் தமிழ் மக்களை அவர்களது சொந்த கிராமங்களை விட்டு வெளியேறும்படி வற்புறுத்தி வருகின்றனர்.

இந்த இக்கட்டான நிலையினை மேலும் மோசமாக்கக் கூடிய வகையில் சந்திரிகா அரசு தமிழர் தாயகமான கந்தளாயில் இருபது சதுர கிலோ மீற்றர் பரப்பளவினை சிங்கள மயமாக்கம் செயற்பாடு ஒன்றை தொடங்கியுள்ளது. இந்த செயற் திட்டத்தினை ஒழுங்குபடுத்தி நெறிப்படுத்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் திருகோணமலை அமைப்பாளரும் ஓய்வு பெற்ற பொலிஸ் அதிகாரியுமான எஸ். குணவர்த்தனா சிறீலங்கா அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ளார். □

# தென் தமிழீழத்தில் சிறீலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் அதிகரிப்பு

ஜெயசிக்குறுய் வடக்கில் தோல்வியைத் தழுவி வரும் நேரத்தில் தென் தமிழீழத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் பல வெற்றிகரமான தாக்குதல்களை நடாத்தி சிறீலங்காப் படையினரை திணரடித்துக் கொண்டிருக்கின்றனர். அவற்றில் சில இங்கு தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

### காத்தான்குடிச் சோதனைச்சாவடி தாக்கியழிப்பு

ஏப்ரல் மாதம் 18ம் திகதி இரவு 10.30 மணியளவில் காத்தான்குடி சிறீலங்கா இராணுவச் சோதனைச்சாவடி தமிழீழ விடுதலைப்புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகியது. இத்தாக்குதலில் சோதனைச் சாவடி அழிக்கப்பட்டதுடன், சோதனைச்சாவடிக்கு அருகாமையிலிருந்த இராணுவத்தினர் தங்கும் வீடொன்றும் விடுதலைப் புலிகளினால் தாக்கப்பட்டுள்ளது. இத்தாக்குதலின் பொழுது ஒரு சிறீலங்கா இராணுவத்தினன் கொல்லப்பட ஏனையோர் காயங்களுடன் தப்பியோடி உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அங்கிருந்த ஆயுதங்கள் விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப்பட்டுள்ளன. விடுதலைப் புலி மேஜர் அருந்தவராஜ் (அமலசிங்கம் லேகரன்-மட்டக்களப்பு) இத்தாக்குதலின் பொழுது வீரச்சாவெய்தியுள்ளார்.

### வந்தாறு முலை தாக்குதலில் இரு இராணுவத்தினர் கொலை

மட்டக்களப்பு வந்தாறுமுலையில் சிறீலங்கா இராணுவத்தினர் மீது தமிழீழ விடுதலைப்புலிகள் நடாத்திய தாக்குதல் ஒன்றில் இரண்டு சிறீலங்கா இராணுவத்தினர் கொல்லத்தட்டதாக களச்செய்திகள் தெரிவிக்கின்றன. ஏப்ரல் 30 ம் திகதி நடைபெற்ற இத்தாக்குதலில் தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பில் கப்டன் தவநிதி, லெப்டினன்ட் அகிலன் ஆகிய இரு போராளிகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.

### இராணுவத்தினர் இருவர் கொல்லப்பட்டனர்

மட்டக்களப்பு வாழைச்சேனையில் மாவடி வேம்பில் இராணுவத் தொடரணிக்கு காவல் நின்ற சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் நடாத்திய தாக்குதலில் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். ஏப்ரல் 30ம் திகதி காலை 11.45 மணியளவில் நடாத்தப்பட்ட இத்தாக்குதலை அடுத்து சிறீலங்கா படையினர் 30 நிமிடங்களாக சுற்றிவர உள்ள கிராமங்கள் மீது சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 45 வயதுடைய மூன்று குழந்தைகளின் தந்தை ஒருவர் காயமடைந்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இச்சம்பவத்தின் பொழுது சித்தாண்டி முருகன் கோவில் திருவிழாவுக்குச் சென்று கொண்டிருந்த முருக பக்தர்கள் மீதும் சிறீலங்காப் படையினர் கண்மூடித்தனமாகத் தாக்கி அவர்களை அடித்து நொருக்கியதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

### மட்டக்களப்பு வாவியில் வைத்துக் கடற்படை படகு கைப்பற்றப்பட்டது

மட்டக்களப்பு வாவியில் ரோந்து நடவடிக்கைகளின் பின் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சிறீலங்கா கடற்படைப் படகொன்றை தமிழீழ விடுதலைப் புலிகள் ஏப்ரல் 30ம் திகதி இரவு 8.30 மணியளவில் கைப்பற்றிக் கொண்டு சென்றுள்ளனர். வாவியுள் நுழைந்த தமிழீழ விடுதலைப் புலிகள் அங்கு நிறுத்தப்பட்டிருந்த கடற்படைப் படகை அவிழ்த்துக் கொண்டு எவ்வித இழப்புமின்றி சென்றதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பு சத்துருக்கொண்டானில் சிங்களக் கடற்படையின் இரு படகுகளை விடுதலைப் புலிகள் கொண்டு சென்றுள்ளனர் என சிறீலங்கா செய்தி வெளியிட்டுள்ளது. ❄

# எங்கள் தமிழினம் .......

### மன நோயாளி என்று சகோதரர் கூறியும் கைது செய்து இழுத்துச் சென்றனர்

தமிழ்ப் புது வருடப் பிறப்பன்று தொல்புரம் மேற்கைச் சேர்ந்த மன நோயாளி ஒருவரை கைது செய்த

சிறீலங்கா இராணுவம் அவரைத் தெருத் தெருவாக இழுத்துச் சென்றது. இந்தக் கொடுமையைக் கண்ணுற்ற அவரது சகோதரர் அவர் மனநோயாளி என இராணுவத்தினர்க்கு எடுத்து விளக்க முற்பட்டார். இதனால் ஆத்திரமுற்ற இராணுவத்தினர் அவரின் அடையாள அட்டையையும் பறித்து அவரையும் மிக மோசமாகத் தாக்கி விட்டுச் சென்றுள்ளனர்.

### கேட்பாரற்ற கைதுகள்- மக்கள் பரிதவிப்பு

மட்டுவில் கிழக்கைச் சேர்ந்த 20 வயதுடைய கிருஷ்ணன் ஜெயக்குமார் மடத்தடியில் வைத்துச் சிறிலங்கா படையினரால் ஏப்ரல் 22ம் திகதி தைாக்கப்பட்டார். அதே தினத்தில் கனகம்புளியடியில் வைத்து சர சாலையைச் சேர்ந்த துரைசிங்கம் சுதாகரன் என்னும் தமிழ்ப் பொது மகன் ஒருவரும் சிறீலங்காப் படையால் கைது செய்யப்பட்டார்.

இதேவேளை மார்ச் மாதத்தில் சிறீலங்காப் படையினரால் கைதாக்கப்பட்டு விவரம் வெளியிடப்படாமல் இருந்த இரு தமிழர்கள் பற்றிய விவரம் வெளியாகி உள்ளது.

ஏழாலையைச் சேர்ந்த திருச்செல்வம் இந்திரஜித், சிவாகரன் ஐங்கரன் ஆகியோரே சிறீ லங்கா இரா்ணுவத்தால் மார்ச் மாதத்தில் கைதாக்கப்பட்டு இப்பொழுது பெயர் தெரியவந்துள்ள இருவரும் ஆவர்.

### ஊருக்குப் போகப் புறப்பட்டவரை உலகை விட்டே அனுப்பியது சிங்களத் தடுப்பு முகாம்

யாழ்குடா நாட்டிலுள்ள தன் ஊருக்குப் போக எனப் புறப்பட்ட தம்பிப்பிள்ளை பாரி என்னும் 86 வயது தமிழ் மூதாட்டியை அவரின் நடமாடும் சுதந்திரத்தைப் பறித்து திருகோணமலை உப்புவெளிக் கண்ணாடித் தொழிற்சாலை தடுப்பு முகாமில் தடுத்து வைத்தனர் சிறீலங்கா படையினர்.

வட்டுக்கோட்டை அராலியைச் சேர்ந்த இம்மூதாட்டி சிறீலங்காத் தடுப்பு முகாமிலேயே மரணமடைந்துள்ளார். □

# மகளின் முன்னிலையில் தாயைச் சுட்டுக் கொன்றனர்

## ❄ சிறீலங்கா கப்டனின் கொடுஞ் செயல்

சாவகச்சேரி கச்சாய் வீதியில் தேநீர்க்கடை நடாத்தி 5 பிள்ளைகள் கொண்ட குடும்பத்தை காப்பாற்றி வந்த 44 வயது பெண்ணான தெய்வேந்திரம் சகுந்தலா, ஏப்ரல் 21ம் திகதி இரவு 7.45 மணிக்கு கடையை பூட்டிவிட்டு , தனது மகளுடன் வீடு திரும்பும் பொழுது, சிறீலங்காப் படைக் கப்டன் சில்வா என்பவனால் பாலியல் பலாத்காரத்திற்காக கையைப்பிடித்து இழுக்கப்பட்டுள்ளாள்.

அச்சமயம் சகுந்தலா கையைப் பறித்துக் கொண்டு ஓடியுள்ளார். உடனே அச்சிங்களப் படுபாதகன் மகளின் கண் எதிரிலேயே சகுந்தலா என்ற அந்த தமிழ்த்தாயை சுட்டுக் கொன்றுள்ளான் . ❄

# தமிழீழ மக்களின் தலைவிதி புலிகள் இயக்கத்தின் போராட்ட வலுவில்! புலிகளின் பலத்திற்கும் வளத்திற்கும் வலுச்சேர்ப்பது புலம்பெயர் தமிழர் பொறுப்பில்!!

**புலம்பெயர் தமிழ் மக்களின் தேசப்பணிக்கு நன்றி தெரிவித்து தமிழீழத் தேசத்தலைவர் மேதகு. வே. பிரபாகரன் அவர்கள் ஆற்றிய உரையின் கருத்துக்களை மையமாகக்கொண்டு எழுதப்பட்ட கட்டுரை.**

இன்று தமிழீழ மக்கள் அதிமுக்கியமான காலகட்டத்தில் நிற்கின்றனர். **மிகப்பெரிய அளவிலான போர் எம் தாயகத்தின் மீது ஏவிவிடப்பட்டுள்ளது. போரின் நோக்கம், தமிழர் தாயகத்தை சிதைத்து அழிப்பது. அதன் மூலம் தமிழரின் தேசிய அடையாளத்தையே அழித்து சிங்கள பௌத்த ஆட்சியின் கீழ் தமிழரை அடிமை கொள்வது.**

இதற்காகச் சந்திரிகா அரசாங்கம் தன் முழுப்பலத்தையும் திரட்டி தமிழீழ விடுதலைப் புலிகளுடன்

மூர்க்கத்தனமான முறையில் மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக போரிட்டு வருகிறது. இந்த ஆக்கிரமிப்பு போரினால், தமிழீழத் தேசத்தின் வளத்திற்கு என்றுமில்லாத அளவுக்கு பெரும் நர்சம் விளைவிக்கப்பட்டு வருக்கின்றது.

ஆம்! இந்தப் போரினால் எங்கள் தாயகம் சுட்டெரிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. நாமும் நம் மூதாதையர்களும் நாம் உயிரிலும் மேலாகப் போற்றிய எம் கோவில்கள், நினைவாலயங்கள், அறிவாலயங்கள், சரித்திரப் பிரசித்தி பெற்ற இடங்கள், கலாச்சாரச் சின்னங்கள், எங்கள் தாய்தந்தையரின் உழைப்பால் உதிரத்தால் உருவாக்கப்பட்ட எங்கள் வீடுகள், தொழிற்கூடங்கள், வியாபாரத் தலங்கள் எல்லாமே சிங்களப்படைகளால் இடிக்கப்பட்டும் எரிக்கப்பட்டும் காட்சியளிக்கின்றன. மனிதனுக்குத் தொழுநோய் ஏற்பட்டால் மேனி எல்லாம் புண் ஆவது போல் தமிழீழத் தேசம் முழுவதும் சிங்களக் குண்டுகளால் சல்லடை போட்டு துளைக்கப்பட்டு பாழடைந்த பூமியாக காட்சியளிக்கிறது. "மனிதனை அழித்தால் மற்றைய மனிதன் எழுந்து தாயகத்தைக் காக்கப் போராடுவான். ஆனால் தாயகத்தையே சுட்டெரித்துவிட்டால் அவன் சந்ததி சந்ததியாக அடிமையாக வாழ்வான்." என்ற சந்திரிகாவின் வேதம் மாமன் ரத்வத்தையால் எம் தாயினும் மேலான தாயகத்தை சுட்டெரித்துக் கொண்டிருக்கிறது.

ஒரு பாரம்பரிய கலாச்சார பூமியையே சுடுகாடாக்கி அதில் சிங்கக் கொடியேற்றத் துடிக்கும் சந்திரிகா என்ற சர்வதேச யுத்தக்குற்றவாளியும், அவரின் சகாக்களும் இனஅழிப்பு என்பது தமது அரசியல் அபிலாஷைகளை நிறைவு செய்வதற்கான ஊடகமென கருதி பகிரங்கமாகவே தமிழின அழிப்பில் ஆனந்தம் கொண்டு அதனைத் தமது அரசியல் வெற்றியாக அறிவித்து மகிழ்கின்றனர். இதன் விளைவாக படையெடுப்புக்கள் என்றும் , படை நகர்வுக்கள் என்றும் , பாதுகாப்பு வலயங்கள் என்றும், பாதை திறப்பு என்றும் சிங்கள ஆக்கிரமிப்பு



இராணுவம் ஒரு ஊழிக் கூத்தையே எமது தேசத்தில் நடாத்திக் கொண்டிருக்கிறது.

எங்கள் வீட்டு முற்றங்கள் வேலிகள் செவ்வரத்தம் பூக்களால் சிவந்து கிடப்பதை நாம் கண்டதுண்டு. ஆனால் இன்றோ, எங்கள் உடன்பிறப்புக்களின் உடலில் ஊடுருவும் சிங்களக் குண்டுகளால் – எங்கள் சொந்தங்களின் தலையில் கொட்டப்படும் சிங்களக் குண்டுகளால் – பீரிட்டுப்பாயும் இரத்தங்களாலும், உடல் சிதறிச்சாகும் எமது உடன்பிறப்புக்களின் சதைக் கட்டிகளாலும், எங்கள் வீடுகள், வாசல்கள், பள்ளிகள் கோவில்கள் எல்லாமே சிவந்து காணப்படுகின்றது.

பசியறியா எம் மண்ணில் மக்களின் தொழில் செய்யும் உரிமை பறிக்கப்பட்டும், உணவு உற்பத்திகள் முடமாக்கப்பட்டும் , உணவு வழங்கல்களை தடுத்து உணவை ஆயுதமாக்கியும் சிறீலங்காவால் திட்டமிட்ட முறையில் எம் மக்கள் பசியால் வாட்டி வதைக்கப்படுகின்றனர். சொத்தற்ற சமுதாயமாக தமிழர் சமுதாயத்தை மாற்றும் நோக்கில் தமிழர் தேசத்தின் உட்கட்டுமானங்களை யுத்தத்தினால் உருக்குலைக்கும் சிறீலங்கா, தமிழர் சந்ததியையே ஊட்டச் சத்தற்ற சந்ததியாக மாற்றும் நோக்கில் சிறு குழந்தைகளுக்கான உணவுகள் முதல் வயோதிபர்களுக்கான உணவுகள் வரை அனைத்து வகையான உணவுகளையும் தடைசெய்தும், மிகக் குறைந்த அளவில் மட்டுப்படுத்தி அனுமதித்தும் தமிழ்மக்களைக் கொல்லாமல் கொன்று குவிக்கின்றது. இதுவும் போதாதென்று தமிழ் மக்கள் நோய்களால் செத்தழியட்டும், உடல் பலம் குன்றி ஊனமுற்றவர்களாக வாழட்டும் என்ற தீய நோக்கோடு மருந்தையும், மருத்துவ வசதிகளையும் தடை செய்து தமிழர் தாயகத்தினை நோய்களின் உறைவிடமாக்கி வருகிறது. விஞ்ஞான தொழில் நுட்ப வசதிகளுடன் திகழ்ந்த எமது தாயக பூமியை, அன்றைய கற்கால வாழ்வை விட மோசமான வாழ்வுடைய இடமாக மாற்றும் கொடிய செயற்திட்டங்கள் சிறீலங்காவால் நாளும் பொழுதும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழர்களின் மனித உரிமைகளும், சர்வதேச சட்டங்களும் வழமைகளும் பகிரங்கமாக சிறீலங்காவால் மீறப்பட்ட போதும், இவற்றினை ஒழுங்குபடுத்தி நெறிப்படுத்த வேண்டிய பொறுப்புள்ள சர்வதேச அமைப்புக்களும் நாடுகளும் இவை குறித்து பாராமுகமாக இருக்கின்றன. இது **இன்றைய உலகமானது மனித நீதி என்ற அச்சில் சுழலவில்லை, மனிதாயம், தர்மம் தார்மீகம் போன்ற அறங்களால் உலக உறவுகள் நிர்ணயிக்கப்படவில்லை என்பதை தெளிவுபடுத்தி நிற்கிறது. இதனைத் தனக்கு சாதகமாகப் பயன்படுத்தும் சிறீலங்கா ஒருபுறம் சமாதானத்துக்கான போர் என்றும் மறுபுறம் தீர்வுப் பொதி என்றும் இரட்டை அணுகுமுறை ஒன்றை நடைமுறைப்படுத்தி தன்னால் இலங்கைத் தீவில் நெருக்கடிகளைத் தீர்த்து, நிலையான ஆட்சியைத் தோற்றுவிக்க முடியும் என்னும் மாயைத் தோற்றத்தை உருவாக்க முயன்று வருகிறது. இதனால் சந்திரிகா சமாதான தேவதையாக சர்வதேச உலகால் பூஜிக்கப்படலாம். ஒரு அரசு என்ற ரீதியில் சிறீலங்காவின் குரலுக்கு ஒரு நம்பகத்தன்மை இருக்குமென உலக நாடுகள் எண்ணியிருக்கலாம். அந்தக் குரலும் ஒரு தமிழனின் குரலாக ஒலித்து சந்திரிகாவின் இனஅழிப்புக்கான போரை சமாதானத்திற்கான போராக நியாயப்படுத்துகிற போது அதனை உலகு நம்புவதில் ஆச்சரியமில்லை. தமிழரின் மூளை வளத்தை விலை கொடுத்து வாங்கி அதை தமிழருக்கு எதிராகப் பயன்படுத்தும் அரசியல் சாணக்கியம் சந்திரிகா அரசிடம் உண்டு என்பதை உலகம் எப்படித் தான் புரிந்து கொள்ளப் போகிறது. ஆயினும் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு தமிழர் தேசத்தில் அமைதியைக் கொண்டு**

### தன்னம்பிக்கை தருகின்றீர்கள்

தாயக பாசத்துடன் தேசத்தின் விடுதலைக்காக உலக அரங்கில் நீங்கள் எழுப்பி வரும் உரிமைக் குரல் ஒடுக்கப்பட்டு வரும் எமது மக்களுக்குத் தென்பையும் திடத்தையும் கொடுத்து வருகிறது. பாராமுகம் காட்டும் இந்த உலகத்தில் நாம் தனித்து நிற்கவில்லை என்ற தன்னம்பிக்கையையும் எமக்கு தருகிறது.

*– தேசியத்தலைவர் வே.பிரபாகரன் அவர்கள்*

### பெருமிதம் அடைகிறேன்

கடல்கடந்து புலம் பெயர்ந்து அந்நிய தேசங்களில் அந்நிய பண்பாட்டுச் சூழலில் நீங்கள் வாழ்ந்து வந்த போதும் உங்களது தேசப்பற்றும், இனப்பற்றும், தணியாத நெருப்பாக எரிவதைக் காண எமக்கு மகிழ்ச்சியும் பெருமிதமும் ஏற்படுகின்றது.

*– தேசியத்தலைவர் வே.பிரபாகரன் அவர்கள்*

**வருவது சந்திரிகா அரசின் நோக்கமல்ல. தமிழர் தேசத்தை ஆக்கிரமித்து வளங்களை அழித்து தமிழரை அடிமை கொள்வது தான் சந்திரிகா அரசின் ஒரே நோக்கும் போக்குமாக உள்ளது. ஆனால் என்றோ ஒருநாள் உலக அரங்கில் சந்திரிகாவின் முகமூடி கலையும் என்பது உறுதி. அந்தக் காலம் அண்மித்துக் கொண்டிருக்கிறது. அந்தக் காலத்தைக் கனிய வைப்பது தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்ட வலுவில் தான் தங்கியுள்ளது.**

இது சாத்தியமாக கூடிய ஒன்று என்பதை தமிழீழ விடுதலைப் போரின் களச் சாதனைகள் மிகத் தெளிவாக எதிர்வு கூறி நிற்கின்றன. **மூன்று ஆண்டுகளுக்கு மேலாகத் தொடரும் கடும் போரில், சிங்கள இராணுவத்திற்கே பெரிய அளவிலான உயிரிழப்பும் ஆயுத இழப்பும் ஏற்பட்டுள்ளது. யாழ் குடாநாடு இராணுவத்தின் பிடிக்குள் வீழ்ந்த போதும், தமிழீழத்தின் பல பகுதிகள் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் வந்திருக்கிறது. தந்திரோபாய பின் நகர்வின் அவசியம் கருதியே தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்தை இழக்க நேரிட்டது. ஆயினும் தொடரும் போரில் தமிழீழ விடுதலைப் புலிகள் பெரும் சாதனைகளை ஈட்டி எதிரிக்குப் பேரிழப்புக்களை ஏற்படுத்தி வருவது உலகறிந்த உண்மை. எனினும், சந்திரிகா அரசாங்கம் யாழ்ப்பாணத்திற்கான தரைப்பாதைத் திறப்பு என்ற போர்வையில் வடமாகாணத்தை துண்டாடி, தமிழர் தாயகத்தை உருக்குலைப்பதற்கான வன்னிப் படையெடுப்பை "ஜெயசிக்குறு" இராணுவ நடவடிக்கை என்ற பெயரில் தொடர்ந்து கொண்டிருக்கிறது.** இதில் சிங்கள இராணுவம் பெரும் தோல்விகளையே அடுத்து அடுத்து தழுவிய பொழுதிலும் சந்திரிகா குடும்பம் சிங்கள இளைஞர்களை ஆயிரக் கணக்கில் காவு கொடுத்தாவது எப்படி என்கிலும் தம் அரசியல் பதவிகளை காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்ற உறுதியுடன் போரை முன்னெடுத்து வருகிறது. இதனால் வன்னிப் பெருநிலப்பரப்பு சிங்கள இராணுவத்தினதும் தமிழீழ விடுதலைப் புலிகளினதும் களப்பரீட்சைகளின் போர்க்களமாக மாறியுள்ளது.

ஆயினும் தமிழீழ விடுதலைப் புலிகள் தம் சொந்தக் காலில் நின்று போராடுவதற்கு தமிழீழ மக்களின் தமிழீழத் தேசப்பற்றும் விடுதலைப் பற்றும் தான் ஆணிவேராக உள்ளது. **தமிழீழ மக்களின் சுதந்திர உணர்வே தமிழீழ விடுதலைப் புலிகளின் சக்தி என்பதை இனங்கண்ட சந்திரிகா தமிழ் மக்களை இராணுவ இலக்காக்கும் தனது கொடிய திட்டத்தை அமுல்படுத்தி யுள்ளார்.** இதன்படி தமிழ் மக்கள் மேல் போர் அழுத்தங்களும், இராணுவ ஆக்கிரமிப்புக்களும், கட்டாய இடப்பெயர்வுகளும், அகதி வாழ்வுகளும் சந்திரிகாவால் ஆயுதபடைப் பலம் கொண்டு திணிக்கப்பட்டு வருகிறது. தமிழர் தேசத்தின் வாழ்வையும் வளத்தையும் அழிப்பதன் மூலம் தமிழரின் போராடும் ஆற்றலை அழித்தல் என்னும் சிறீலங்காவின் செயற்பாட்டினால் தமிழீழ மக்கள் சுமக்க முடியாப் பெரும் பளுக்களைச் சுமந்து தவிக்கின்றனர். இதனால் இது வரை காலமும் விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டு உதவிய மக்கள் இன்று ஜீவ மரணப் போராட்டத்துள் தள்ளப் பட்டுள்ளனர். **இப்படியான ஒரு சோதனையான காலகட்டத்தில் தமிழீழ தேசத்தின் விடுதலைச் சுடர் அணைந்து போகாது பாதுகாக்கும் பொறுப்பு அந்த மண்ணிலே பிறந்து அந்த தேசத்தின் வளங்களிலே வாழ்வு பெற்று, சிங்கள சிறீலங்காவின் அரசபயங்கரவாதத்தினால் அந்த மண்ணை விட்டு சர்வதேச நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் தமிழீழ மக்களின் கைகளில் தங்கியுள்ளது.**

உலக விடுதலைப் போராட்ட வரலாறுகளைத் திரும்பிப் பார்த்தால் ஒவ்வொரு தேச மக்களும் தமது தேசியங்களின் மேல் அடக்கு முறையாளர்கள் கடும் போக்கினைக் கைக்கொண்ட நேரங்களில் எல்லாம் அத் தேசியங்களின் புலம் பெயர் மக்களின் உதவிகளாலேயே அவற்றை வெற்றி கொண்ட வரலாறுகளைக் காணலாம். யூத தேச வரலாற்றில் புலம்பெயர் யூத



மக்களின் தாயகப் பற்றினாலேயே, தாராளநிதி உதவிகளினாலேயே இஸ்ரேல் எனும் ஒரு நாடு உருவாகியது என்பதை வரலாற்றாளர்கள் ஆணித் தரமாக எடுத்துக் கூறுவதைக் காணலாம்.



எரித்திரியா விடுதலைப் போராட்டத்தில் ஆரம்பத்தில் எரித்திரியர்களுக்கு உதவிய ரஷ்யாவே பின்னர் எரித்தியர்களுக்கு எதிரியாக மாறி அவர்களை ஒடுக்க முனைந்த காலகட்டங்களில் எல்லாம் புலம்பெயர் எரித்திரிய மக்களே எரித்திரிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்க உதவி அத்தேசத்தின் விடுதலையைச் சாத்தியமாக்கினர்.

பாலஸ்தீனிய விடுதலைப் போராட்டம் புலம்பெயர் பலஸ்தீனியர்களின் பங்களிப்புக் களினாலேயே முன்னேற்றம் கண்டது என்பது உலகறிந்த உண்மை. ஐரிஸ் விடுதலைப் போராட்டத்தினை அயர் லாந்து வழி வந்த அமெரிக்க மக்களின் பங்களிப்பும் நிதி உதவிகளும் ஊக்குவிப்பதை யாவரும் அறிவர்.

இவைகளை எல்லாம் எடுத்து நோக்கின் **தேச விடுதலைப் போராட்டங்களுக்கு உந்து சக்தியாக விளங்குவது தேசப்பற்று. தேசப்பற்றானது உணர்வு பூர்வமான ஒன்று. மனிதர்களின் அடிமனதில் ஆழ வேரோடி நிற்பது. கால இட எல்லைகளைக் கடந்து மனிதர்களை ஆட்கொண்டு நிற்கும் மகத்தான சக்தி. இந்த தேசப்பற்று புலம் பெயர்ந்து வாழும் மக்களிடையே மண்பற்றாக தீவிரம் பெறுவது இயல்பு.**

அதிலும் சிறப்பாக தமிழீழ மக்கள் சர்வதேச நாடுகளில் தாயக மண்ணைப் பிரிந்து வாழ்வதற்கு சிறீலங்காவின் அரச பயங்கரவாதமே காரணம். தமிழர்களைத் தங்கள் வரலாற்றுத் தாயகத்தில் இருந்து இடம்பெயர வைப்பதும் சிறீலங்காவின் சிங்கள பௌத்த பேரினவாத செயற்திட்டங்களில் ஒன்றாகும். பெருந் தொகையில் தமிழர்கள் குடிபெயர்ந்தால் தமிழர் தேசம் பலவீனம் அடைந்து தமிழர் தாயகம் சிதைந்து விடும் என்பது சிங்கள ஆட்சியாளர்களின் எதிர்பார்ப்பு. ஆனால் அவர்கள் எதிர்பார்ப்புக்கு மாறாக, கடந்த 20 ஆண்டு காலத்தில் பல்லாயிரம் தமிழர்கள் புலம்பெயர்ந்தமை பொருளியல் ரீதியாக தமிழீழத் தேசத்திற்கு பயனுள்ளதாக மாறியுள்ளது. புலம்பெயர்ந்த தமிழர்கள் தங்கள் சொந்த மண்ணையும் மக்களையும் மறக்கவில்லை. கிட்டிய குடும்ப உறுப்பினர்கள், உறவினர்கள், நண்பர்களுக்கு புலம்பெயர் தமிழர்கள் உதவினதுடன் தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கும் பல வழிகளில் தமது உதவிகளை நல்கினர். இதனால் தமிழரின் சுதந்திர இயக்கம் தமிழீழத்தில் கால்பதித்து நின்றாலும் அந்த விருட்சத்தின் கிளைகள் உலகெங்கும் பரந்து வியாபித்து நிற்கின்றது. தமிழீழ தேசிய இனம் சிறிய தேசிய இனமாக இருந்தாலும் தமிழீழ மக்களின் பலம் வலிமைமிக்கது. அந்தப் பலம் உலகளாவிய சக்தியாக புலம்பெயர் மக்களாக விஸ்வரூபம் எடுத்து நிற்கிறது. இந்த மாபெரும் தமிழீழ புலம்பெயர் மக்கள் சக்தி, தமிழர் தாயகத்தின் பாதுகாவலனாக நின்று உறுதியோடு போராடும் தமிழர் விடுதலை இயக்கத்தின் போராடும் சக்திக்கு வலுவூட்டி பலமூட்டுவதிலேயே தமிழீழ விடுதலை பேராட்டத்தின் வெற்றியின் விரைவு தங்கியுள்ளது.

இந்தப் போர் தமிழரின் தாயகத்திற்கான போர். இந்தப் போருக்கு புலம்பெயர் தமிழர்களாகிய நாங்கள் ஒவ்வொருவரும் எம்மால் இயன்ற பங்களிப்பை இன்றே செய்ய வேண்டும். அனைத்துலக தமிழீழ மக்களாகிய நாம் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்குத் முழுப் பலத்துடன் தோள் கொடுத்து உதவினால் இந்தப் போரில் தமிழீழ மக்கள் வெற்றி கொள்வது உறுதியிலும் உறுதி. ❑

## கூடிய பங்களிப்பு வேண்டும்

இன்று தமிழீழத்தில் உருவாகி இருக்கும் சூழ்நிலை வித்தியாசமானது. ஆபத்தானது. இன்று போர் உச்சக்கட்டத்தை அடைந்திருக்கிறது. தமிழின அழிப்பு தீவிரமடைந்திருக்கின்றது. இதுவரையும் விடுதலைப்போராட்டத்தில் பங்கு கொண்டு உதவிய மக்கள் இன்று ஜீவ மரணப் போராட்டத்தில் இடர்பட்டு வாழ்கின்றார்கள். தமிழீழ மக்களின் தலை விதியே புலிகள் இயக்கத்தின் போராட்ட வலுவில், போராடும் சக்தியில் தங்கி நிற்கின்றது. தமிழர் தேசத்தின் பாதுகாப்பும் தமிழரின் எதிர்கால அரசியல் வாழ்வும் இன்றைய போரின் போக்கில் தான் தங்கியிருக்கின்றது. இந்த இக்கட்டான நிலையில், தமிழினத்தின் போராட்ட சக்தியான எமது இயக்கத்தின் பலத்திற்கும் வளத்திற்கும் வலுச்சேர்ப்பது உங்களது பொறுப்பும் கடனுமாகின்றது. ஆகவே தான் உங்களிடமிருந்து கூடியளவிலான பங்களிப்பை, நிதியுதவியை நாம் வேண்டி நிற்கிறோம்.

*– தேசியத்தலைவர் வே.பிரபாகரன் அவர்கள்*

# தாயகம் நோக்கிய பயணம்

## முதலாம் பாகம்

### அத்தியாயம் இருபத்தியிரண்டு

(தொடர்ச்சி)

மீட்பாளர்களும் வேறு பல சியோனிஸ்ட் குழுக்களும், ஒன்றாக இருக்கவும், எல்லோரையும் கட்டுப்படுத்தும் சூழ் நிலை நடவடிக்கைகளை எடுக்கவும் முடிவு செய்தனர். ஜெர்மனி போலந்துக்குள் படையெடுத்தபோது, போலந்தின் கிழக்குப் பக்கமிருந்த அரைவாசிப் பகுதியை விழுங்கும் நோக்கில் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருந்த சோவியத் யூனியன் ஒரு பாதுகாப்பான இடம் என்ற மாயையில் அங்கு ஓடிப்போயினர். வேறு குழக்கள் தலைமறைவு நடவடிக்கைகளை ஆரம்பித்தனர். வேறு சில குழுக்கள், தப்பியோடுவதற்கான இரகசிய அமைப்புக்களை உருவாக்க முயன்றனர்.

மீட்பாளர்கள், வார்சோவிலேயே தங்கியிருந்து, தலைமறைவு எதிர்ப்பியக்கத்தை நகருக்குள்ளேயே வளர்க்கவும், போலந்தின் மற்றைய மீட்பாளர் குழுக்களுடன் தொடர்புகளைப் பேணவும் முடிவு செய்து கொண்டனர். மண்டெக் பத்தொன்பதாவது வயதை எட்டாமல் இருந்தபோதும், இராணுவப் பிரிவுத் தலைவனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டான். றுத்துடைய இரகசியக் காதலனான ஜான் மண்டெக்கின் உப தளபதியாக நியமிக்கப்பட்டான். ஜெர்மனியர் இங்கு அதிகாரத்தில் நிலை கொண்டதும், ஹான்ஸ் பிராங் ஆளுநரானார். உடனடியாகவே யூதர்களுக்கெதிரான பல சட்டங்கள் அறிவிக்கப்பட்டன. வழிபாடுகள் தடுக்கப்பட்டன. பிரயாணம் மட்டுப்படுத்தப்பட்டது. வரி அறவிடுதல் அதிகளவாயிருந்தது. தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது குடிசார் அரசு நிறுவனப் பதவிகளில் இருந்து யூதர்கள் தூக்கியெறியப்பட்டனர். பாண் பெறுவதற்கான வரிசைகளில் இருந்து யூதர்கள் தடுக்கப்பட்டனர். பொது இடங்களுக்குச் செல்வதிலிருந்து யூதர்கள் தடுக்கப்பட்டனர். பாடசாலைகளிலிருந்து யூதர்கள் நீக்கப்பட்டனர்.

யூதசேரிகளை மீள உருவாக்குவது பற்றியும் பேசப்பட்டது.

இப்படியான கட்டுப்பாடுகளைச் சுமத்திய சட்டங்களுக்கு மேலதிகமாக போலந்து மக்களுக்கு உண்மை நிலையை விளக்கும், பிரச்சாரத்திலும் ஜேர்மனியினர் ஈடுபட்டனர். இந்தப் பிரச்சாரங்கள், யுத்தத்தை யூதர்களே ஆரம்பித்தனர் என ஏற்கனவே உருவாகியிருந்த அபிப்பிராயத்தை வலுவூட்டும் வகையிலே நடந்தது. ஒரு படி மேலே போய், ஜேர்மனி ஆக்கிரமிப்புக்கு யூதர்களே காரணம், ஏனெனில், யூத போல்ஷ்விக்குகளிடம் இருந்து போலந்து மக்களைக் காப்பாற்றுவதற்காகவே ஆக்கிரமிப்புத் திட்டமிடப்பட்டது என்னும் வகையில், பிரச்சாரம் நடாத்தப்பட்டது. வார்சோவும், மற்றைய நகரங்களும், தாடிகளோடு கூடிய யூதர்கள், கன்னியாஸ்திரிகளை பாலியல் வன்முறைக்கு உட்படுத்துவது, மற்றும் யூத ஒழுக்கக் குறைவான நடவடிக்கைகளைச் சித்தரிக்கும் சுவரொட்களால் மூழ்கடிக்கப்பட்டன. தாடிகளை வெட்டுதல், யூத வழிபாட்டிடங்களை அசுத்தமாக்குதல் மற்றும் பகிரங்கமான இடங்களில் யூதர்களை அவமரியாதை செய்தல் போன்றவை ஊக்குவிக்கப்பட்டன.

பெர்லின், ஜேர்மனி.

பெர்லினில், நாஸி உயர் அதிகாரிகள் யூதர்கள் பிரச்சினையைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தார்கள். பல திட்டங்கள் முன் வைக்கப்பட்டன. எஸ். டி. தலைவனான, ஹெயிட்ரிச் (Hedrich) யூதர்களைப் பணயமாக வைத்திருந்து விட்டுப் பெரும் தொகையில் நாடு கடத்துவதையே ஆதாரித்தான். ஷட்ச் (Schacht) எனப்பட்ட நிதித்துறை நிபுணனோ, யூதர்களின் சொத்துக்களை மெதுவாகச் சுரண்டிப் பறிப்பதில் ஆர்வமாயிருந்தான். பல திட்டங்கள் முன்வைக்கப்பட்டு ஆராயப்பட்டன. மடகஸ்கார் தீவுக்கு எல்லோரையும் நாடு கடத்தும் ஒரு பழைய திட்டமும் மீளாய்வுக்கு எடுக்கப்பட்டது. பிரிட்டிஷ் தடை மட்டும் இல்லாவிட்டால், எல்லோரையும் பலஸ்தீனத்துக்கு அனுப்பவும் பலர் திட்டமிட்டிருப்பர்.

> யூதர்களுக்கெதிரான பல சட்டங்கள் அறிவிக்கப்பட்டன. வழிபாடுகள் தடுக்கப்பட்டன. பிரயாணம் மட்டுப்படுத்தப்பட்டது. வரி அறவிடுதல் அதிகளவாயிருந்தது. தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது குடிசார் அரசு நிறுவனப் பதவிகளில் இருந்து யூதர்கள் தூக்கியெறியப்பட்டனர். பாண் பெறுவதற்கான வரிசைகளில் இருந்து யூதர்கள் தடுக்கப்பட்டனர். பொது இடங்களுக்குச் செல்வதிலிருந்து யூதர்கள் தடுக்கப்பட்டனர். பாடசாலைகளிலிருந்து யூதர்கள் நீக்கப்பட்டனர்.

எஸ். எஸ். படைபிரிவின் கேணல் ஈச்மன் (Eichmann) பல மீள் குடியமர்த்தல் திட்டங்களை யூதர்களிடையில் அமுல்படுத்திய அனுபவமுடையவன். அவன் பலஸ்தீனத்தில் பிறந்தும், ஹீப்ரூ மொழியை நன்றாகப் பேசக்கூடியவனாகவும் இருந்தது, யூதர்கள் பிரச்சினைக்கான இறுதித் தீர்வுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட அவனைத் தகுதியுள்ளவனாக்கியது. கேர்பியுஸரென் ஸ்ராஸகே இல. 46–ல் (Kurfuersten Strasse) தலைமைக் காரியாலயம் நிறுவப்பட்டது. முதன் முதலாக, இறுதித் தீர்வென்றைத் தீர்மானிக்கும் வரை, யூதர்களுக்கான மீள்குடியமர்தல் திட்டமொன்று அவசியம் எனத் தீர்மானிக்கப்பட்டது. அதிகமான நாஸிகள், மீள் குடியமர்தல் திட்டத்துக்குப் போலந்து இயற்கையாகவே சிறந்த இடம் என ஏற்றுக்கொண்டனர். ஏனெனில், முதலாவதாக ஏற்கனவே முப்பத்தைந்து இலட்சம் யூதர்கள் அங்கு இருந்தனர். இரண்டாவதாக, மேற்கைரோப்பாவில், அவர்கள் எதிர்நோக்கியிருக்கக் கூடிய



பொதுசனக் கோப உணர்வலைகள் இங்கு குறைவாக இருக்கும் அல்லது முற்றாகவே இருக்காது.

ஜேர்மன் ஆளுநரான ஹான்ஸ் பிராங்மேலும் யூதர்களைப் போலந்துக்குள் குவிப்பதை ஆட்சேபித்தான். அவன் யூதர்களை பட்டினி போட முயற்சித்துக் கொண்டிருந்த அதேவேளை, பலரைச் சுட்டும், தூக்கிலிட்டும் தன்னால் முடிந்தவரை கொன்று கொண்டிருந்தான். ஆயினும் பிராங்கின் ஆட்சேபனைகள், பெர்லின் உயர்மட்ட திட்ட வல்லுநர்களால் நிராகரிக்கப்பட்டன.

யூதர்களைப் பிடிக்க போலந்து முழுவதும் ஜேர்மனியர்கள் வலை விரித்தனர். சுற்றிவளைப்புக்குழுக்கள் குறைந்தளவு நேரத்தின் முன்னறிவிப்பில் சிறு நகரங்களுள்ளும், கிராமங்களுள்ளும் புகுந்து யூதர்கள் இருந்த இடத்தில் சுற்றிவளைத்துப் பிடித்தனர். பெரும்பாலான நேரங்களில் தங்களுக்கென எதுவும் எடுத்துக் கொள்ள அனுமதிக்கப்படவில்லை. ட்ரக்குகள் ஏற்றும் ரெயில்வேப் பெட்டியில் ஏற்றியடைக்கப்பட்டு, பெரியளவிலான குடியேற்ற மையங்களுக்கு அனுப்

**லியோன் யூறிஸ்**

பப்பட்டனர்.

சில யூதர்கள் இவ்வாறான சுற்றிவளைப்பை எப்படியோ நேரத்தோடு அறிந்து, ஒன்றில் ஓடித் தப்பிக்கொண்டனர். அல்லது கிறீஸ்தவ வீடுகளில் பணம் செலுத்தி ஒளிந்து கொண்டனர். மிகக் குறைந்தளவு போலந்துக்காரர்களே யூதர்களை ஒளித்து வைக்கும் ஆபத்தான செயலில் ஈடுபட முன்வந்தனர். மற்றவர்களோ யூதர்களிடமிருந்து கடைசிச் செம்புச்சல்லிவரை உறிஞ்சி எடுத்து விட்டுப் பரிசுப் பணத்தைப் பெறுவதற்காக, ஜேர்மனியரிடம் இவர்களைக் காட்டிக் கொடுத்தனர்.

தொடரும்...


## வாசகர் கவனத்திற்கு !

இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ள தலைப்பிற்குப் பொருந்தக்கூடிய வகையில் எட்டுவரிகளுக்கு மேற்படாமல் உங்கள் சிந்தனையில் எழும் கருத்துக்களை கவிதை வடிவில் தாருங்கள். உங்கள் ஆக்கங்களை **05- 06 - 1998** இற்கு முன்பாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறு கீழ்தரப்பட்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

# நாளைய சந்ததிக்கு.

கவிதை அனுப்ப வேண்டிய முகவரி:

**'Kalathil',**

**Eelam House, 202Long Lane, London SE1 4QB.**

# சிறுகதை




எங்கோ ஒரு இனம் புரியாத இடத்திலிருந்து வேகமாக மிக மிக வேகமாக எழுந்து கொண்டிருக்கிறேன். அந்த வீழ்ச்சியிலிருந்து மீள எதையோ இறுகப் பிடிக்க வேண்டுமென்ற தவிப்பு, சீரற்ற ஒரு சுருதியில் எழுவதும், தணிவதுமாக என்னை ஆட்கொண்டிருக்கிறது.

ஆனால், எதுவுமே முடிவின்றி, எல்லையைத் தொடமுடியாதவாறு எகிறிக் குதித்து......

குழப்பம்...ஒரே குழப்பம்......

எண்ணங்களைப் பிடித்து எங்காவது ஓரிடத்தில் கட்டிவைக்க வேண்டுமென்ற தவிப்பு எழுந்த போதிலும், அது தவிப்பு என்ற மட்டத்திற்கு மேல் செல்ல முடியாதவாறு தடுமாறுகிறது.

நான் இருக்கும் இடம் எது....? எத்தனையோ பக்கங்களால் எண்ணங்கள் எழுந்து வந்து மோதுகின்றன. எனினும் எவையுமே தமது பரிணாமங்களை வெளியிடுமுன்பே ஒன்றுடன் ஒன்று மோதிக் குழம்பி தெளிவற்றவையாய் மங்கிக் கொண்டு செல்கின்றன.

எங்கோ ஆழக்கிணற்றிலிருந்து வெளிவரும் தெளிவும், தெளிவற்றதுமான சொற்கள் மெல்லச் செவிப்பறையைத் தடவிச் செல்கின்றன. பிரமையா......?

இல்லை...அவை மனிதக் குரல்கள் தான்.....!

எனது மூளையின் கலங்கள் அச்சொற்களுக்கு அர்த்தத்தைக் காண அதிவேகமாகச் சுற்றிச் சுழல்கின்றன. தாவித் தாவி எதையோ பிடித்து விட்டது போன்ற ஒரு உணர்வு.

"மிஸ்.......சேலைன் ஏறுறது நிண்டிட்டுது........பைப்புக்கை இரத்தம் ஏறுது....." அக்குரலில் இருந்த பதட்டத்தைப் புரிந்து கொள்ளுமளவுக்கு ஏதோ ஒரு இடத்திற்கு நான் வந்து விட்டதுபோல் உணர்கிறேன்.

நிலவுவது அமைதியா...அல்லது எனது கேட்கும் சக்தி மீண்டும் அற்றுப் போய்விட்டதா......

கண்களைத் திறக்க வேண்டும் போலிருக்கிறது...ஆனால் முடியவில்லை ....இமை மடல்களை ஏதொ ஒரு பாரம் அழுத்துவது போல் உணர்கிறேன்.

"எல்லாத்தையும் கழட்டுங்கோ..ஆள் முடிஞ்சுது.....! பெட்சீற்றாலை மூடிவிட்டிட்டு ஸ்கிறீனை இழுத்துவிடுங்கோ"

அதிகாரத்தொனி ஒன்று கட்டளையிடுகின்றது. சற்று பலமாக ஆரம்பித்த சப்பாத்து ஒலிமெல்ல மங்கி மறைகின்றது. அந்தக் குரல் ஒரு மருத்துவத் தாதியுடையாதாயிருக்கலாம் என்ற எண்ணம் என்னுள் எழுகின்றது.

"ஐயொ.....பாக்கியம்.....!" என்று அலறுகிறேன். ஏன் என்வாய் திறக்க வில்லை....ஏன் என் குரல் வெளியே வரவில்லை.....!

பயமொன்று என்னுள் எழுந்து விஸ்வரூபமெடுக்கிறது. நான் பேசும் சக்தியை இழந்து விட்டேனா.....?

எனினும் மனம் "பாக்கியம்! பாக்கியம்! என்று புலம்புகின்றது. நினைவுகளுக்குள் பாக்கியம் புகுந்து நெஞ்சை பிசைகிறாள்.

"அம்மாவுக்கு வருத்தம் கடுமை. உங்களை பார்க்க ஆசைப்படுகிறா. உடனே வரவும்!" கொழும்பு மாறகம புற்றுநோய்ச் சிகிச்சை நிலையத்தில் பாக்கியத்தை வைத்துப் பராமரித்துக் கொண்டிருந்த எனது மூத்த மகள் சொர்ணத்தின் இவ்வரிகளைத் தாங்கிய அந்தக் கடிதம் என் கைக்குக் கிடைத்த போது, அவள் கடிதம் போட்ட திகதியிலிருந்து இரு வாரங்களைக் காலம் விழுங்கி விட்டிருந்தது.

பயணங்கள், கடிதங்களைப் பொறுத்து உடனடியாக என்ற சொல் அர்த்தமிழந்து விட்ட போதிலும், நோய் முற்றும் வேகமும், மரணம் மனிதனைத் தொடும் காலமும் இன்னும் அர்த்தங்களை அப்படியே தாங்கிக் கொண்டேதானே இருக்கின்றன.

முப்பது வருடங்கள் இன்ப துன்பங்களிலெல்லாம், என்னுடன் இணைந்து பங்கு கொண்டு, எங்களின் எச்சமாக இந்த உலகுக்கு ஐந்து ஜீவன்களை வழங்கிய அவளை உயிருடன் பார்த்து விடவேண்டுமென்ற துடிப்பு என்னுள்



மலையாய் எழுந்தது.

பார்க்க முடியுமா?

இரண்டு வாரங்கள்.....பதினாலு நாட்கள்.......

இவை இன்னும் விரிந்து பதினைந்து...பதினாறு...பதினேழு....

"சேலை"யின் ஏறுவது நின்றதும், பைப்புக்குள் இரத்தம் ஏறியதும், போர்வையால் இழுத்து மூடச் சொன்னதும் மீண்டும் நினைவுக்கு வந்து மோதுகின்றன.

அது பாக்கியம் தானா....?

அப்படியானால் பாக்கியம் ....."ஐயொ ...என்ரை பாக்கியம்" என்று அலறவேண்டும் போலிருக்கிறது....! வாய் மட்டும் மெல்ல அசைவது போல் தோன்றுகிறது. ஆனால், குரல் வெளிவரவில்லை!

சக்தியிழந்தது...குரலா.... காதா.....? எதுவுமே... புரியவில்லை...!

உயிலங்குளத்தில் பத்துப் பன்னிரண்டு வரிசையாக அமர்ந்திருந்த சனங்களில் நானும் ஒருவனாயிருக்கிறேன். எட்டிப் பார்த்த இடமெல்லாம் வெட்ட வெளியாயிருக்கும் "முன்னால் வயல் நிலம்" இன்று இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் செல்வதற்கான தங்கு மேடையாக மாறிவிட்டிருந்தது. சுட்டெரிக்கும் வெய்யிலில், ஏற்கனவே, என்தலையில் வயது வெட்டையாக்கி விட்டிருந்த பாதி மொட்டைப் பிரதேசத்தில் வியர்வையைத் துளித் துளியாக அரும்ப வைத்துக் கொண்டிருந்தது.

நீண்ட நேரம் காத்திருந்தமையால் பொறுமை என்னை விட்டு மெல்ல மெல்ல விலகிக் கொண்டிருக்கிறது.

குந்தி இருக்க முடியாமல் இருக்கிறது. மூன்று நாள் அனுஷ்டித்த பொறுமையை எண்ணி மீண்டும் என்னைச் சமாதானப்படுத்திக் கொள்கிறேன்.

சிப்பாயின் கை எனது வரிசையை நோக்கி நீளுகின்றது. ஒன்று இரண்டு....மூன்று... இருபத்து நாலு...அடுத்தது இன்னொருவன்.... பிறகு....நான்..... நானேதான்...உடலெல்லாம் ஏதொ ஒரு துடிப்பு.

இருபத்தைந்தாவது ஆளுடன் சிப்பாயின் கை அடுத்த வரிசைக்கு மாறுகிறது....அப்படியானால்...அப்படியானால்...நான் இன்றைக்கும் போக முடியாதா? இல்லை...போக வேண்டும்...இல்லை போயே ஆக வேண்டும்.

இருந்த இடத்திலிருந்து எழுந்து சிப்பாயை நோக்கி ஓடுகிறேன், "ஐயா...ஐயா..மனிசிக்கு வருத்தம் கடுமை...கடைசிக்கட்டம்...அவளை உயிரோடை பார்க்க வேணும்...ஐயா ஐயா..." எனது கெஞ்சல் அவனைத் திரும்பி என்னைப் பார்க்க வைக்கின்றது.

"என்ன...என்ன....வேணும்...!"

> **முப்பது வருடங்கள் இன்ப துன்பங்களிலெல்லாம், என்னுடன் இணைந்து பங்கு கொண்டு, எங்களின் எச்சமாக இந்த உலகுக்கு ஐந்து ஜீவன்களை வழங்கிய அவளை உயிருடன் பார்த்து விடவேண்டுமென்ற துடிப்பு என்னுள் மலையாய் எழுந்தது.**
> **பார்க்க முடியுமா?**

ஒரு பெரு மூச்சுடன் சுற்றி வரப் பார்க்கிறேன். சுற்றி வர ஆயுதம் தாங்கிய இராணுவச் சிப்பாய்கள்!

காத்திருந்தவர்கள் மத்தியில் ஒரு சலசலப்பு!

முட்கம்பி வேலிகளுக்கப்பால் ஒரு ஜீப் வந்து நிற்க ஒரு இராணுவ அதிகாரி அதிலிருந்து இறங்கி வருகிறான். மடிப்புக் கலையாத அவனது ஆடைகளும் மீசை இல்லாத முகமும் அணிந்திருந்த விதம் விதமான பட்டிகளும், கம்பீரமான நடையும் அவனில் ஏதோ ஒரு ஆளுமையைப் பறைசாற்றிக் கொண்டிருந்தன.

காவலரணுக்கு அருகில் வந்து நின்று ஒரு முறை காத்திருந்தவர்களை முழுமையாக நோட்டம் விடுகிறான். ஒரு சிறிய புன்னகை அவன் முகத்தில் தவழ்ந்து நிலைக்கிறது. அது ஏளனத்தில் எழுந்தது போலவும் ஒரு எண்ணம் என்னுள் எழுந்து மறைகின்றது.

எனினும் என்னை நான் சமாதானம் செய்து கொள்கிறேன். "அவன் நல்லவனாயிருப்பான்!" இன்று எப்படியும் உள்ளே சென்று விடலாம் என்ற நம்பிக்கை தோன்றுகின்றது.

அந்த அதிகாரி அருகிலிருந்த சிப்பாயை அழைத்து ஏதோ சிங்களத்தில் சொல்லுகிறான். அவன் தலையாட்டி விட்டு சனங்கள் இருக்கும் இடத்திற்கு வருகிறான். முதலாவது வரிசையில் இருந்த ஒரு சிலரை அழைத்து உள்ளே விடுகிறான்.

எனது மனம் தவிக்கிறது. பாக்கியத்தின் நிலை என்னவோ ஏதோ என்ற தவிப்பு நெஞ்சில் எழ, என்னால் அந்த இடத்தில் "ஐயா.. என்னையும் விடுங்கொ பிளிஸ்...!"

"போ...போ...!"

"ஐயா...ஐயா....!"

அவன் கண்களில் அனல் தெறிக்கிறது. கையில் இருந்த ஏதோ ஒன்றை என் தலைக்கு நேரே ஓங்குகிறான்!

நாலுபக்கமும் முட்கள் முளைத்திருந்த முட்கிழுவங்கம்பு என் முகத்திற்கு நேரே பூதாகரமாக வருகின்றது. "சடார், சடார்" என்ற ஒலியுடன் என் தலையில் மொட்டைப் பகுதியில் அது மோதுகின்றது. தலையில் முட்கள் குத்துவது போன்ற ஒரு உணர்வு. மெல்லக் கைகளால் தலையைப் பொத்திப் பிடிக்கிறேன். அப்படியே நான் நிலத்தில் குந்தி விடுகிறேன்.

யாரோ விம்மியழும் ஒலி மிகத் தொலைவிலிருந்து வருவது போல் கேட்கிறது. யார்... யாரது... பாக்கியமா...அப்போ நான் கொழும்புக்கு வந்து விட்டேனா... இல்லை...இல்லை... எப்படி வரமுடியும்...? அப்போ நான் எங்கேயிருக்கிறேன்...

அடி விழுந்தது நினைவுக்கு வருகின்றது...விண்விண்ணென்று தலை கொதித்து...மெல்லக் கையை உயர்த்தி தலையைத் தடவவேண்டும் போலிருக்கிறதும்... கை அசைய மறுக்கிறது...

அப்படியானால்....

கைகால்களும் செயலிழந்துவிட்டனவா?

இப்படித்தான்...ஆமாம் இப்படித்தான்...மன்னாரிலிருந்து வவுனியா நோக்கி பஸ்ஸில் வரும்போது தலையில் "விண் .... விண்" என்று தாங்க முடியாத வலி.

என்ன செய்வது – தாங்கித்தான் ஆகவேண்டும்.

மூன்றாம் நாள் இராணுவம் என்னை

தொடர்ச்சி 15 ம் பக்கம்.....

# ஒரே வழி தங்கத் தமிழீழமே!
# ஒரே தலைமை விடுதலைப் புலிகளே!!

தெய்வப் புலவர் திருவள்ளுவர் யாத்த திருக்குறளை தமிழ் வேதம் என்றும் ஐந்தாவது வெதம் என்றும் தமிழ் கூறும் நல்லுலகம் எங்கும் பேசப்படுவது மரபாகும்.

திருவள்ளுவர் திருக்குறளின் பொருட் பாலில் செங்கோன்மை பற்றியும், கொடுங்கோன்மை பற்றியும் இரண்டு அதிகாரங்களில் அறிவுரை வழங்கியிருக்கிறார். ஒன்றுக்கொன்று எதிரும் புதிருமாக இருக்கின்ற இந்த இரண்டு அதிகாரங்களையும் (55,56) அடுத்தடுத்து வைத்துச் சொல்லியிருப்பது கவனிக்கத் தக்கது. பொதுவாக நல்லதை அறிவுறுத்திச் சொல்லிவிட்டு அல்லதை சொல்லாமல் விடுவது வழக்கமாகும். ஆனால், வள்ளுவர் செங்கோன்மையின் சிறப்பைச் சொல்லிவிட்டு கொடுங் கோன்மையின் கொடுமையை அடுத்துச் சொல்வதால் செங்கோன்மையின் மேன்மையை மேலும் துலங்கச் செய்கிறார்.

மன்னனது ஆட்சி எப்படி இருக்க வேண்டும் எப்படி இருந்தால் சிறப்பு என்பதை திருவள்ளுவர் வழமைபோல் க்டுகைத் துளைத்து எழு கடலைப் புகுத்தி குறுகத் தறித்த குறள் மூலம் சொல்கிறார்.

குடிதழிஇக் கோலோச்சும் மானில மன்னன்
அடிகுடிதழிஇ நிற்கும் உலகு (குறள் - 544)

குடிமக்களை அரவணைத்துச் செங் கோல் செலுத்தும் மன்னன் அடியை உலகத்தார் பொருந்தி நிற்பார் என்பது இதன் பொருளாகும். அரவணைத்துச் செல்வதென்றால் இன்சொல்லாலும் கொடையாலும் மக்களை அணைத்தல். பரந்த பூமியை ஒரு குடைக்குள் ஆள்வதால் மானில மன்னன் என்றார். ஆனால் செங்கோல் கோடுற்றால் அதாவது வளைந்தால் என்னவாகும்? அதனை கொடுங்கோன்மையில் சொல்கிறார்:

*கூழுங் கொடியும் ஒருங்கிழக்கும்*
*கோல்கோடிச் சூழாது செய்யும் அரசு (குறள்-554)*

சூழாது கோல்கோடிச் செய்யும் அரசு - பின் விளைவுகளை எண்ணாது முறை தவறி ஆட்சி செய்யும் அரசன், கூழுங் கொடியும் ஒருங்கிழக்கும் - அச்செயலால் முன்ஈட்டிய பொருளையும் பின் ஈட்டுதற்கு ஏதுவாகிய குடிமக்களையும் அரசன் ஒரு சேர இழப்பான்.

தீர ஆராயாது நிரபராதியான கோவலனுக்குக் கொலைத் தண்டனை கொடுத்து விட்ட 'தேரா மன்னன்' பாண்டியன் நெடுஞ்செழியன் தன் தவறை உணர்ந்த போது இடி கேட்ட நாகம் போல் இடிந்து போனான். உடனே 'தாழ்ந்த குடையன் தளர்ந்த செங்கோலன் .....மன்பதை காக்கும் தென்புலம் காவல் என் முதல் பிழைத்தது. கெடுக என் ஆயுள்!' என அவன் வாய்விட்டு அரற்றி தனது அரியாசனத்திலிருந்து மயங்கி வீழ்ந்து உயிர் விடுகிறான்.

மன்னர் ஆட்சி இப்போது இல்லை. இன்று நடப்பது மக்களாட்சி. ஆனால் வள்ளுவர் இயம்பிய உண்மைகள் இன்றைய மக்களாட்சி யுகத்துக்கும் நிச்சயம் பொருந்தும். இன்று மன்னர்களுக்குப் பதில் ஆட்சிக் கட்டிலில் இருக்கும் ஒவ்வொரு அரசியல்வாதிக்கும் ஒத்துவரும்.

துரதிட்டவசமாக சிறிலங்காவின் சிங்கள ஆட்சியாளர்களுக்குத் திருக்குறள் புகட்டும் ஆட்சி நெறியோ அறநெறியோ தெரியாது. தெரிந்திருக்க நியாயமும் இல்லை. குறிப்பாக மேட்டுக் குடியில் பிறந்த சனாதிபதி சந்தரிகாவிற்கு தெரிந்திருக்க முகாந்திரம் இல்லை.

சந்திரிகாவின் கொடுங்கோன்மை ஆட்சியில் தமிழ் குடிமக்களின் அடிப்படை உரிமைகள் காலில் போட்டு மிதிக்கப் படுகின்றன. ஏன் என்றால் வனவாசம் இம்மென்ன முன்பே சிறைவாசம் என்பது அந்தக் காலம். இன்று ஏன் என்று கேட்குமுன்பே, இம்மென்னுமுன்னே ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் அவர்கள் தமிழ் மக்கள் என்ற ஒரே காரணத்துக்காக பால், வயது, மூப்பு, இளமை, நேரம் காலம் பாராது உடுத்த உடையில் நடுநிசியில் படுத்த பாயில் வைத்து சிங்கள இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு ஆடு, மாடுகள் போல் இழுத்துச் சென்று கொடிய சிறைக்கூடங்களில் அடைக் கப்பட்டு சித்திரவதை செய்யப் படுகிறார்கள்.

ஒரு புறம் புலிகளுக்கு ஆதரவில்லை. புலிகளின் பிடியில் சிக்கிய தமிழ் மக்களை விடுவித்து விட்டோம், அவர்கள் உள்ளங்களையும் எண்ணங்களையும் கவர்ந்துவிட்டோம் என்று உள்நாட்டில் மட்டுமல்ல உலகம் பூராவும் கோபல்ஸ் பாணியில் பிரசாரம் செய்யும் சந்திரிகா அரசு மறுபுறம் எந்தத் தமிழனைப் பார்த்தாலும், தமிழிச்சியைப் பார்த்தாலும் பால், வயது வித்தியாசமின்றி புலிகள் என்ற சந்தேகத்தில் கைது செய்து சிறையில் அடைக்கிறது.

தேசிய அடையாள அட்டை, பொலிசாரின் அத்தாட்சிப் பத்திரம், பத்திரிகையாளர் என்றால் பத்திரிகையாளர்களுக்குரிய அடையாள அட்டை இப்படி எதைக் காட்டினாலும், எதை நீட்டினாலும் பிரயோசனமில்லை.

"ஒயா தெமிழதே" என்ற கேள்விக்கு 'ஆம்' என்றால் போதும். விசாரணைக்கு முன்பே குற்றவாளி என்ற முத்திரை குத்தப்படுகிறது. கைவிலங்கு மாட்டப் படுகிறது. வாகனங்களில் ஏற்றப் படுகிறார்கள். பொலிஸ் - காவல் நிலையம், சிறைச் சாலை நோக்கி பெரும்பாலும் ஒரு வழிப்பயணம் ஆரம்பிக்கப்படுகிறது.

சனாதிபதி சந்திரிகா ஆட்சியில் நடைபெறும் சுற்றிவளைப்பு, கைது, சித்திரவதை போன்ற அராஜகம் வேறு எந்த நாட்டிலும் இல்லை. நாகரிகம் படைத்த நாடுகளில் மட்டுமல்ல காட்டுமிராண்டி நாடுகளெனச் சொல்லப்படும் நாடுகளிலும் இல்லை.
ஒரு சில புலிகளைப் பிடிப்பதற்காக ஒட்டு மொத்தமாக ஆயிரக் கணக்கில் தமிழர்கள் கண்டபடி கைது செய்யப்படுகிறார்கள்.

கொழும்பில் மட்டுமல்ல யாழ்ப் பாணத்திலும், மட்டக்களப்பிலும், திருகோணமலையிலும் இந்தச் சுற்றி வளைப்புக்களும் கைதுகளும் கேட்டுக் கேள்வியின்றி நடைபெற்ற வண்ணம் இருக்கிறது.

இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு 16 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்ட பொதுமக்கள் யாரும் செல்லக்கூடாதென சிறிலங்கா இராணுவம் தடை உத்தரவு போட்டுள்ளது. இப்பகுதிகளுக்கு உணவு மற்றும் மருந்து போன்ற அத்தியாவசியப் பொருட்களை எடுத்துச் செல்லவும் தடை விதித்துள்ளது. அப்பகுதிகளுக்கு 350 ரூபாவுக்குமேல் எடுத்துச் செல்லப்படக் கூடாது எனவும் பொதுமக்கள் எச்சரிக்கை செய்யப் பட்டுள்ளனர்.

கடந்த சித்திரை 2ஆம் திகதி மானிப்பாய், ஆனைக்கோட்டை, நவாலி உள்ளிட்ட பெரும்பகுதி சிங்களப் படையால் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதலுக்கு உள்ளாக்கப்பட்டன. அதிகாலை 6 மணிக்கு ஆரம்பித்த இந்தச் சுற்றி வளைப்பு சோதனைக் கெடுபிடி மாலை 2 மணி வரை நீடித்து இருக்கிறது. சுற்றிவளைக்கப்பட்ட தமிழ் மக்களை இனம் காண 4 முகமூடிகள் சிங்கள இராணுவத்துக்கு துணையாக இருந்திருக்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டம் வாழைச் சேனையை அண்டிய ஆறு கிராமங்கள் சித்திரை 1ஆம் திகதி சிங்கள இராணுவத்தினால் சுற்றி வளைக்கப்பட்டு சோதனையிடப்பட்டன. வயது வேறுபாடின்றி 500க்கும் மேற்பட்ட ஆண்கள் வீதியில் கொதிக்கும் வெய்யிலில் தடுத்து வைக்கப்பட்டு சிங்களப் படையினரால் கடுமையாகத் தாக்கப்பட்டனர். பின்னர் அவர்கள் அனைவரும் வாழைச்சேனை துறைமுக இராணுவ முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டார்கள்.

சனாதிபதி சந்திரிகா ஆட்சியில் நடைபெறும் சுற்றிவளைப்பு, கைது, சித்திரவதை போன்ற அராஜகம் வேறு எந்த நாட்டிலும் இல்லை. நாகரிகம் படைத்த நாடுகளில் மட்டுமல்ல காட்டுமிராண்டி நாடுகளெனச் சொல்லப் படும் நாடுகளிலும் இல்லை.

ஒரு சில புலிகளைப் பிடிப்பதற்காக ஒட்டு மொத்தமாக ஆயிரக் கணக்கில் தமிழர்கள் கண்டபடி கைது செய்யப் படுகிறார்கள்.

ஒரு புறம் புலிகளுக்கு ஆதரவில்லை. புலிகளின் பிடியில் சிக்கிய தமிழ் மக்களை விடுவித்து விட்டோம், அவர் கள் உள்ளங்களையும் எண்ணங் களையும் கவர்ந்துவிட்டோம் என்று உள்நாட்டில் மட்டுமல்ல உலகம் பூராவும் கோபல்ஸ் பாணியில் பிரசாரம் செய்யும் சந்திரிகா அரசு மறுபுறம் எந்தத் தமிழனைப் பார்த்தாலும், தமிழிச்சியைப் பார்த்தாலும் பால், வயது வித்தியாசமின்றி புலிகள் என்ற சந்தேகத்தில் கைது செய்து சிறையில் அடைக்கிறது.

நாவற்குழியைச் சேர்ந்த செல்லையா தவமணி என்ற 60 வயது மூதாட்டி மத்திய மாகாணத்திலுள்ள மின்நிலைய திட்டங்களைக் கொண்ட அச்சடித்த பையை வைத்திருந்தார் என்ற குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிபதி அவரைப் பிணையில் செல்ல உத்தரவிட்ட பின்னர் மறுபடி பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் கைது செய்த சிங்களப் பொலிஸ் அவரை அனுராதபுரச் சிறைக்கு கொண்டுபோய் அடைத்து வைத்துள்ளது.

கொழும்பு கப்பியாவத்தைக் கோவில் சண்முகநாதக் குருக்களது மகளும் மருமகனும் பொட்ஸ்வானாவிலிருந்து சுகயீனமுற்றிருந்த தனது தாயாரைப் பார்க்க ஓடோடி கடல் கடந்து வருகிறார்கள். ஆனால், காலையில் வந்த அவர்களை மாலையில் சந்திரிகாவின் ஏவல் நாய்களான சிறீலங்கா கடற்படையினர் புலிகள் என்ற சந்தேகத்தில் கைது செய்து காவல் நிலையத்துக்கு இழுத்துச் செல்கிறார்கள்.

**நக்கீரன்**

தொடர்ச்சி 2 ம் பக்கம்......

# சகாப்தம் படைத்த ஸ்ராலின்கிராட் 4

அரசியல் பணியாளர்களும் எல்லா மட்டங்களைச் சேர்ந்த கமாண்டர்களும் – பட்டாலியனின் கட்சி செயலாளர் முதல் அரசியல் பிரிவின் மேலாளர், படையின் யுத்த கவுன்சில் உறுப்பினர் வரை – முன்னணிக்கு சென்று வந்தனர் அல்லது அங்கேயே இருந்தனர். நானும் போர்வீரர்களின் காப்பகழிகளிலும் பீரங்கிகளின் அருகிலும் நின்று கட்சியின் முக்கிய முடிவுகளையும் எந்த யூனிட்டில் இருந்தேனோ அதன் போர்க்கள கடமைகளையும் போர்வீரர்களுக்கு விளக்கியிருக்கிறேன். காப்பகழியில் போர்வீரனுடன் இப்படி மனம் திறந்து பேசிய பின் அவன் தன் பொறுப்பு ணர்வை இன்னமும் ஆழமாகப் புரிந்து கொண்டான். தனக்கிடப்பட்ட கட்ட ளையை நிறைவேற்ற வேண்டியது எவ்வளவு முக்கியமென் அவனுக்கு நன்கு விளங்கியது.

ஆம், கட்சி அரசியல் விளக்கப் பணி இப்படித்தான் எங்கள் படையில் நடந்தது.

படையின் அரசியல் பணியாளர் லெப்டினன்ட் கேணல் இவான் செர்கேயெவிச் பான்சென்கோ அர்லோகா பிரதேசத்தில் நடந்த சண்டைகளின் போது பட்டாலியனோடு சேர்ந்து, சுற்றி வளைக்கப்பட்ட சூழலில் சண்டை யிட்டார். அவர் 120 நபர்களோடு சேர்ந்து முற்றுகையிலிருந்து மீண்டு, பாசிச போர் வரிசைகளைப் பிளந்து கொண்டு வந்து, தொழிற்சாலைப் பகுதியில் போரிட்ட துருப்புகளுடன் சேர்ந்தார்.

சீனியர் அரசியல் பணியாளர் இவான் சியோமின், "கிராஸ்னி அக்தியாபர்" தொழிற்சாலையின் ஒரு பிரிவில் சண்டையிட்ட தாக்குதல் குழுவுடன் இரண்டுவாரங்கள் இருந்தார். அவருடைய கால் துண்டிக்கப்பட்டு படுகாயமடைந்ததுந்தான் அவர் அங்கிருந்து வெளியில் கொண்டு வரப்பட்டார். பத்யுக்கின் 284வது



துப்பாக்கிப் படை டிவிசனில் கட்சி ஸ்தாபனங்கள் பெரிதும் ஒற்றுமையாக இயங்கின. அரசியல் பிரிவின் மேலாளர் த்கச்சேன்கொ, றெஜி மென்டுல்கலின் கட்சிச் செயலாளர்கள், துணை அரசியல் பிரச்சாரர்கள் ஆகியோர் சிறப்பாகச் செயல்பட்டு கட்சி, கம்சமோல் ஸ்தாபனங்களின் பணியை ஒழுங்க மைத்ததால் சண்டையில் ஒருமுறைகூட கோழைத்தனமோ குழப்பமோ தலை காட்டவில்லை. பத்யுக் டிவிசனில் சைபீரிய வீரர்கள் வெளிக்காட்டிய உறுதியும் துணிவும் பாசிச டிவிசன்களுக்கு பெரிதும் கவலை அளித்தன. மமாயெவ் குன்றில் மட்டும் பத்யுக்கின் தாக்குதல் குழுக்களின் இயந்திரப் பீரங்கிகள், தானியங்கித் துப்பாக்கிகளுக்கு ஒருசில ஆயிரம் எதிரிகள் பலியானார்கள்.

பத்யுக் டிவிசனில் அரசியல் பிரிவு எதிரியுடனான புதிய போராட்ட முறைகளை வளர்ப்பது, பரப்புவதன் மீது குறிப்பான கவனம் செலுத்தியது போர் வீரன் திமீத்ரி ஷுமக்கோவ், டாங்கி எதிர்ப்புத் துப்பாக்கியை விமானங்களைச் சுடுவதற்கு ஏற்றவாறு மாற்றிய மைத்ததுமே அரசியல் பணியாளர் எஸ். திஹரோஷேவ் அதை எப்படிச் செய்வதென்பதைப் பற்றியோ பொறியியல் வரைபடங்களை அன்றைய தினமே எல்லா யூனிட்டுக்களுக்கும் அனுப்பினர். இரண்டே நாட்களில் றெஜிமென்டின் டாங்கி எதிர்ப்புப் போர் வீரர்கள் 6 எதிரி விமானங்களை சுட்டு வீழ்த்தினர். குறிதவறா வீரர் இயக்கம் ஆரம்ப மானதும் – இந்த டிவிசனில் வசீலி ஸாய்ஸெவ் இதைத் துவக்கிவைத்தார் – எல்லா யூனிட்டுக்களிலும் பதுங்கிடங்களிலும் காப்பகழிகளிலும் "குறி தவறா வீரனின் பதிவேடுகள்" தோன்றின. ஒரு நாளில் எவ்வளவு பாசிஸ்டுகள் ஒழித்துக்கட்டப்பட்டனர் என்று இவற்றில் கணக்கு வைக்கப்பட்டது. குறி தவறாமல் சுட்டவர்கள் பற்றிய விபரங்களை டிவிசன் பத்திரிகை அன்றாடம் பிரசுரித்தது. மாண்டுபோன தோழர்களின் குடும்பத் தாருக்கு கடிதமெழுதும் ஒரு இயக்கமும், பத்யுக்கின் டிவிசனில் பரவியது. சகதோழன் சிந்திய குருதிக்குப் பழிக்குப்பழிவாங்குவதாக இக் கடிதங்களில் போர் வீரர்கள் சபதமேற்றனர். முழுக்குவாட்களும் பிளாட்டூன்களும் கம்பனிகளும் ஏன் முழுபட்டாலியன்களுமே இக்கடிதங்களில் கையொப்பமிட்டனர். சபதத்தில் கையொப்பமிட்டவர்கள் அதை எப்படி யாவது நிறைவேற்ற முயன்றனர் எனபதைச் சொல்லவே தேவையில்லை.

படை வாழ்க்கையின் எல்லா அம்சங்களின் மீதும் கம்யூனிஸ்டுக்களின் செல்வாக்குப் பரவியது. முன்னணிக்கு சூடான உணவை எடுத்துச் செல்வதன் மீது அவர்கள் பெரும் கவனம் செலுத்தினர். காயமடைந்தவர்களை நன்கு பராமரிப்பதற்கு ஏற்பாடு செய்தனர்.

> சகதோழன் சிந்திய குருதிக்குப் பழிக்குப்பழிவாங்குவதாக இக்கடிதங்களில் போர் வீரர்கள் சபதமேற்றனர். முழுக்குவாட்களும் பிளாட்டூன்களும் கம்பனிகளும் ஏன் முழுபட்டாலியன்களுமே இக்கடிதங்களில் கையொப்பமிட்டனர். சபதத்தில் கையொப்பமிட்டவர்கள் அதை எப்படியாவது நிறைவேற்ற முயன்றனர் எனபதைச் சொல்லவே தேவையில்லை.

பதுங்கிடங்களில் விசேட அரசியல் ஓய்வு அறைகளை ஏற்படுத்தினர். அங்கே பத்திரிகைகளைப் படிக்கலாம் இசையைக் கேட்கலாம், ஓய் வெடுக்கலாம்.

டிவிசன்கள் படையின் கட்சிக் கமிஷன்கள் தம் கூட்டங்களை சாதாரணமாக நேரடியாக அந்தந்தப் படைப்பிரிவுகளிலேயே நடத்தின. போரில் நன்கு செயற்பட்ட வீரர்களை முன்னணியிலே கட்சியில் சேர்த்துக் கொண்டனர்.

அற்புதமாகச் செயற்பட்ட 284வது டிவிசனைச் சேர்ந்த போர் வீரர்களுக்கு கட்சி உறுப்பினர்கள் அட்டைகளை வழங்கியதைக் காணும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. வசீலி ஸாய்த்ஸெவும் அவர்களில் ஒருவர் கட்சி உறுப்பினர் அட்டைகளுக்கு முத்தமிட்ட வீரர்கள் இறக்கும்வரை உறுதியுடன் நிற்பதாகவும் போல்சிவிக் பாரம்பரியத்தில் எதிரியை முறியடிப்பதாகவும் சபத மேற்றனர்.

எங்களுடைய படையிலிருந்த கம்யூ னிஸ்டுகள் எப்படி அயர்வின்றி இயங்கினார்கள் என்பதைப் பற்றி சுருக்கமாகக் கூறினேன். துருப்புக்களை தார்மீக ரீதியாக தயார்படுத்திய இவர்கள் துருப்புக்களின் உயரிய போர்த் திறமைக்கு வழிவகுத்தனர். 62வது படையின் கம்யூனிஸ்டுகள் துருப்புக் களின் மத்தியில் முக்கியபங்காற்றினர். போர் வீரர்களை அணிதிரட்டினர். சண்டையில் இவர்கள்தான் முதலில் நின்றனர். நேருக்குநேர் எதிரியுடன் கைகலப்பில் இறங்கியபோது இவர்கள் தான் மிகவும் மூர்க்கமாகச் செயற் பட்டனர். தாக்குதல்களின் போது இவர்கள் மிகவும் உறுதியோடு இயங்கினர். தாக்குதல் குழுக்களில்



மார்ஷல் சுயிக்கோவ்

இவர்கள் தான் மிகவும் துணிவானவர்களாய் திகழ்ந்தனர். தற்காப்பிலோ இவர்கள் நெஞ்சுறுதி மிக்கவர்களாகவும் தாங்கிநிற்கும் திறன் படைத்தவர்களாகவும் விளங்கினர்.

படையின் கட்சி ஸ்தாபனங்கள் கம்சம்மோலுக்கு வழிகாட்டினர்.

கம்சமோல்!.. இச்சொல்லை உச்சரிக்கும் போது நான் உணர்ச்சிவசப்படுகிறேன். பெருமிதமடைகிறேன். மாபெரும் தேசபக்த யுத்த ஆண்டுகளில் எங்களுடைய படையின் கம்சமோல் உறுப்பினர்கள் தான் எவ்வளவு புகழ்மிகு தியாகங்களைப் புரிந்துள்ளனர், பாசிச ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராகத்தான் அவர்கள் எத்தகைய நெஞ்சுறுதியோடும் வீரத்தோடும் போரிட்டார்கள்.

இடிபாடுகளில் மூழ்கியிருந்த நகரத்தின் தெருக்களில் கடுமையான சண்டைகள் நடைபெற்றபோதே நகரத்தைப் புனரமைத்தபின் ஸ்டாலின்கிராட்டின் மிக அழகிய சாலைக்கு கம்சமோல் சாலை என்று பெயர் வைக்குமாறு நான் கட்சியின் நகரக்கமிட்டி நகரசபையின் தலைவர்களுக்கு வேண்டுகோள் விடுத்தேன். அது படையின் யுத்த கவுன்சில் முழுவதன் வேண்டுகோளாய் இருந்தது. ஏனெனில் நகரத் தெருக்களில் சண்டையிட்ட 62வது படையில் பெரும்பாலும் இளை ஞர்கள்தான் இருந்தனர். பல கம்பெனிகள் பாட்டாலியன்கள் ரெஜிமெண்டுகள் முழுக்க முழுக்க கம்சமோல் உறுப்பினர்களால் ஆனவையாக இருந்தன.

37 வது கார்டு டிவிஸனில் இறக்குப்படை கோர்பச்சில் 8,000 க்கும் மேற்பட்ட கம்சமோல் உறுப்பினர்கள் இருந்தனர். அக்டோபரில் அவர்கள் டிராக்டர் தொழிற்சாலையைப் பாதுகாத்தனர். அக்டோபர் 5ஆம் தேதி மட்டும் 700 விமானத்தாக்குதல் நடைபெற்றன. ஒவ்வொரு விமானமும் 8–12 குண்டுகளை வீசியது. மொத்தத்தில் அக்டோபர் 05 ஆம் திகதி மட்டும் இந்த டிவிஸனில் மீது 6,000 க்கும் மேற்பட்ட குண்டுகள் வீசப்பட்டன. என்றாலும் பாசிஸ்டுகளால் ஓரடி கூட முன்னேற முடியவில்லை.

கட்சி ஸ்தாபனங்களால் வழி நடத்தப்பட்ட கம்சமோல் எப்போதும் முன்னணியில் நின்றது. அந்த அபாயமான கடினமான நாட்களில் ஸ்டாலின்கிராட்டிற்கு வந்த எவரும் இளம் போர் வீரர்கள், உயரிய தார்மீகப் பண்புகளையும், போர் திறமைகளையும் வெளிப்படுத்திய கம்சமோல் உறுப்பினர்கள் சமரில் எத்தகைய பங்காற்றினர் என்பதைக் கண்டிருப்பர்.

தொடரும்.....




## தன்வாழ்வில் தமிழீழம் காண...

சமாதானத்துக்காய் போர்க்கொடி காட்டும்
சந்திரிகா அரசே!
சாவா மானமா என
தன்மானப் புலிவீரருக்காய் உன்னதப் பங்காற்றும்
எம் சந்ததியைப் பார்!
தன் வாழ்வில் தமிழீழம் காணத் துடிக்கும்
பாட்டியின் கனவை காக்கும்
தாயுள்ளங்கள் இங்கே!

- சிறி யேர்மனி.

## சுமையாக ஆகிடுமோ!

எமைச் சுமந்த உத்தமிக்கு
எடுத்துரைப்போம் உமக்கொன்று
எத்தனை கல் தொலைவெனிலும்
எடுத்தகை தவறவிடோம்
எம் இலக்கை அடையும்வரை
எதுவரினும் எதிர்கொள்வோம்
தலைவனவன் தமிழை சுமக்கையிலே
எம்கைக்கு நீஎன்ன சுமையாமோ!

- இர. நடர் யேர்மனி.

## தளரா நெஞ்சங்கள்

பெற்ற மக்கள் போர்க்களம் சென்றனரோ
தாய்மாரே உங்கள் தாயைச் சுமந்து எங்குபோவீர்
கொண்டவர்கள் துணை இல்லையோ
படுகொலைக்கு இரையானாரோ
மாவீரர் அன்னையரோ நீவிர்
தளர்ந்த உடலதுவாயினும் தளரா நெஞ்சமோ
காடுமேடு கடக்கின்றீர் வான் படை
குண்டுமழை பொழிகின்றதோ!

- தமயந்தி புவனேந்திரராசா

## மண் பாசம்

ஏனிந்த ஓட்டம்
ஏனிந்த பதற்றம்
என் மண்ணில் நான் இருக்க
என்னை விட்டிடுங்கள்
என்னூர் மண்ணில்
என்னுயிர் பிரியட்டும்
நீங்கள் தப்பியிருந்தால்
வந்து கொள்ளியிடுங்கள்

-லம்பேர் யேர்மனி.

## நெஞ்சுபொறுக்குதில்லையே

நெஞ்சு பொறுக்குதில்லையே
நொந்து சுமந்தவள் வருந்துகிறாள்
அன்னை மடியை தொட்ட உன்னை
கும்பிடவைத்து குழியில் புதைப்பதற்கு
கூடி சுமந்து ஒதுங்குகிறோம்
இருளடைந்து இடி, புயல், மின்னல்
எழுவது
நிலம் குளிர்வதற்கே
நில்! எங்கள் பிள்ளைகளோடு வருவோம்.

- கரவை கலர் யேர்மனி.

## சுமையல்ல எமக்கு

நாடிழந்து வீடிழந்து
நல் உறவுகள் இழந்து
நாதியற்று நிற்கிறோம்
நரைமூப்பு எய்தினும்
மானம் பெரிதுண்டு
தாயைச் சுமப்பதில்
சுகமும் உண்டு.

- திருமதி விஜயநாதன் யேர்மனி.

## தனிக்குணம்

விழுதுகள் வேரைத்தாங்கும்
விந்தை என்ன உண்டு இதில்
அடிமரம் பட்டுவிட்டது
இரத்தம் சுட்டுவிட்டது-எம்
பற்று விட்டதா? மனிதம்
செத்து விட்டதா? இல்லை
நாங்கள் தமிழராடா - தனிக்குணமுள்ள
தமிழர்கள் - புரிந்துகொள்ளுங்கள்.

- கன்னன் பிரான்ஸ்.



## உறவுகள் உனை மறந்தாலும்

தாயே உனைச் சுற்றி உறவுகள் இருந்தனவே
நீ ஊட்டி வளர்த்த பிள்ளைகளெல்லாம் எங்கே?
பேரன் பூட்டனென்றிருந்தவர் கப்பலேறிய பின்
உன்னையும் மண்ணையும் மறந்து நாட்களாயின
எம் மண்ணில் விருட்சமென இருந்தவளே
கிளைகளும் விழுதுகளும் உனை மறந்தன
கவலைவிடு! மண்ணே உனக்குத்
தோள்கொடுக்கும்.

- கும்பிழானூர் கே. காந்தரூபன் சுவிஸ்.

## வெறும் கனவோ?

புண்ணாகிப் போகுதம்மா நெஞ்சு
புலம்பெயர் வாழ்வுதனைக் கண்டு
பாண்பாடு-பெருமை சாய்ந்து-எம்மைப்
பரிதவித்து அலையவைத்தார் - இன்று
மண்ணாசை கொண்டவரின் ஆட்சி
மனிதத்துவம் அழிவதற்குச் சாட்சி
கண்ணில் நீர் கொண்டுவரும் காட்சி-வெறும்
கனவாகிப் போகுமோ?-எம்மாட்சி.

- அமலா ஜெயந்தன்.

## மனமேது உன்னைப்பிரிய

பத்துமாதம் சுமந்தவளே
இடம்பெயர்ந்து போனாலும்
மனமேது உனைப்பிரிய?
உனைச் சுமந்து செல்கையிலும்
உலங்குவானூர்தி வரும்
உதிரத்தை பாலாக்கி வளர்த்தவளே
உடையவன் நமக்குண்டு
உதிக்கும் தமிழீழம் எமக்குண்டு.

- திருமதி ராஜேஸ்வரி லோகநாதன்
யேர்மனி.

## இருப்பிடந்தான் ஏது?

தாயக மண்ணோ எதிரியின்
கண்ணில் - எம்மினமோ
துன்பத்தின் மத்தியில்
சோகங்களோ எமது தொடர்கதை
சொந்தங்களோ - அகதி நிலை
எமது பாட்டி தாத்தா
அவலத்தின் சாயலில் - அகதி.
ஏது? அவர்களுக்கு இருப்பிடம்.

- திருமதி நற்குணம் குகமாலினி
பிரான்ஸ்.

**ஆக்கங்கள் அபிப்பிராயங்கள் அனுப்பிய
அனைவருக்கும் நன்றி**

# இரு வாரத்துக்கொருமுறை கடிதம் மூலம் சந்திப்போம்!

அன்புச் சகோதரமே !

எங்கள் தமிழ்த் தாய்மார் எங்கள் கண்முன்னே கொல்லப்படுவதை எத்தனை நாளைக்குத்தான் நம்மால் பொறுத்துக் கொள்ள முடியும்? எங்கள் குலப் பெண்கள் தமிழினப் பெண்கள் என்ற ஒரே காரணத்திற்காக மானபங்கத்திற்கு உள்ளாக்கப்படுவதை–பாலியல் வன்முறைகளால் வாட்டிவதைக்கப்படுவதை எத்தனை நாளைக்கு நாம் அனுமதிக்கப் போகின்றோம்? இலக்கிய ஆன்மீக உலகில் திரௌபதையின் துகில். உரிந்த துச்சாதனனைக் கண்டு கொதித்தெழும், நாம் நனவுலகில் எங்கள் தமிழ்ப்பெண்களின் துயிலுரியும் படலங்களைக் கண்டும் வாளா இருப்பது ஏன்?

சிறையில் சீதை துடித்தாள் என்று ஏடெல்லாம் கண்ணீர்க்காவியம் பாடிய தமிழ்ப் படைப்பாளிகள் எங்கள் தமிழ்ப் பெண்கள் சிறீலங்காவால் இராணுவ முகாம்களில் வாட்டிவதைக்கப்படுவது கண்டும் மௌனமாக இருப்பது எதனால்? சிந்தித்துப் பார் !

எங்கள் இனமான உணர்வு செத்து விட்டதா? நாம் தப்பி வந்து விட்டோம். அங்குள்ள சூழ்நிலைகளைக் காட்டி வதிவிட உரிமைகளும் பெற்றுவிட்டோம். இனி அங்கு என்ன நடந்தாலும் நமக்கென்ன.. நம் வாழ்வு இனித்தால் போதும் எனும் உள உணர்வின் புற வெளிப்பாடா, நம் உடன் பிறப்புக்கள் துடிக்கையிலே துயர் இன்றி, துடிப்பின்றித், தன்மான உணர்வின்றி, உண்டு–உறங்கி உல்லாசம் சல்லாபம் தேடும், இவ் அக்கறையற்ற வாழ்க்கை? மனச்சாட்சியைத் தட்டிக் கேள். நீ ஒழுங்காகத் தாயினைப் போற்றி வாழ்பவனாக இருந்தால் அவ்விதம் வாழ மறுக்கும் எம் உடன்பிறப்புக்களிடம் அதை இடித்துக் கூறும் குரலாக எடுத்து விளக்கும் பணியாக உன் செயற்பாடு அமையட்டும்.

சரி, நம் தமிழ்ப் பெண்கள் குலமானம் காக்க நாம் தான் என்ன செய்யலாம் என்கிற கேள்வியை நீ கேட்பது எனக்குப் புரிகின்றது. அதைப்பற்றி நாம் கொஞ்சம் சிந்திப்போம். சில நல்ல செயற்திட்டங்கள் , ஆலோசனைகள் உனக்கும் மனதில் பட்டால் தயங்காது எனக்கு எழுதி அனுப்பு எல்லோருமாக கூடி அது குறித்து ஆவனசெய்வோம்.

சரி, முதலில் நம் தமிழ்ப்பெண்கள் ஏன் இவ்வாறு வதைக்கப்படுகின்றனர் என்பதை முதலில் எடுத்து நோக்குவோம். அப்பொழுதுதான் நாம் என்ன செய்யலாம் என்பது குறித்த தெளிவு வரும்.

நம் தமிழ்ப் பெண்கள் சிங்களப் பௌத்த பேரினவாதத்தைப் பொறுத்தவரை தமிழர்களை உருவாக்கும் தொழிற்சாலைகள். அவர்களை அழிப்பது மட்டுமல்ல பாலியல் வன்முறைக்கு உள்ளாக்குவது என்பது தமிழ் இனத்தின் இனத் தூய்மையை வேரறுப்பதற்கான ஒரு வழியாகச் சிங்களப் பேரினவாதம் கருதுகிறது. இதனால் தமிழர்களுக்கு எதிரான சிங்களப் பேரினவாதச் செயற்திட்டத்தில் தமிழ்ப் பெண்கள் மீதான வன்முறைகள் என்பது ஒரு கூறாக வளர்க்கப்பட்டு வருகிறது.

சிங்கள பௌத்த பேரினவாதம் மேற்கொண்ட தமிழ்மக்களுக்கு எதிரான 1958 முதல் 1983 வரையிலான இனஅழிப்புக் கலவரங்களில் எல்லாம் தமிழ்ப் பெண்கள் திட்டமிட்ட வகையில் வதைக்கப்பட்டனர்– பாலியல் வன்முறைகளுக்கு உள்ளாக்கப்பட்டனர்– கொன்றழிக்கப்பட்டனர்.

தமிழ்த்தாய் ஒருத்தியை நிர்வாணமாக்குவது என்பது சிங்களபௌத்த பேரினவாதிகளைப் பொறுத்த வரை ஒரு வீரச் செயலாக வளர்க்கப்பட்டு வந்துள்ளது. தமிழ்ப் பெண் ஒருவரைக் கொன்றழிப்பது என்பது சிங்களப் பௌத்த பேரினவாதிகளைப் பொறுத்தவரை ஒரு தேசக்கடமையாகப் போற்றி வளர்க்கப்பட்டு வந்துள்ளமை இலங்கைத் தீவின் வரலாறு. இதற்கு எத்தனையோ எத்தனையோ உதாரணங்களை எடுத்துக்கூற முடியும். ஆனாலும் இடச்சுருக்கம் கருதி தாய்மைக் கோலத்தில் காணப்பட்ட எங்கள் தமிழ்த் தாய்மாரின் குடலைக்கிழித்து அவர்களை குழந்தையுடன் சேர்த்தே இனக்கொலை செய்த கொடுமை வரலாறுகளை மட்டும் நினைவுப்புடுத்திச் செல்ல விரும்புகின்றேன். தமிழ்த்தாயின் வயிற்றைக்கிழித்து அவள் வயிற்றில் தமிழ்க் கருவைக் கூட தேடிக்கொல்லும் கொடுமை 1958ம் ஆண்டு முதலே சிங்களப் பௌத்த பேரினவாதிகளால் நடாத்தப்பட்டு வரும் ஒரு திட்டமிட்ட இனவதை. ***இது யுத்தத்தின் விளைவாகத் தமிழ்ப் பெண்கள் இராணுவத் தன்மைகளை அனுபவிக்கின்றனர் எனும் வாதத்தின் உண்மைக்கு மாறான தன்மையை உலகுக்குச் சுட்டிக்காட்டும் வரலாற்றுச் சான்றுகள்.*** தாய்மைப் பேற்று நிலையுற்ற தமிழ்த்தாய்மாரின் வயிற்றைக்கிழித்து உள்ளே புலியா வைத்திருக்கின்றாய் எனச் சிங்கள இராணுவம் தேடிய சம்பவங்கள் வெறும் இராணுவ வெறித்தனம் மட்டுமல்ல, சிங்கள பௌத்த பேரினவாதிகளினால் வளர்க்கப்பட்ட இனவெறி அரசியலின் அறுவடைகளும் கூட. இந்த சிங்கள இனவெறி அரசியலால் தமிழர் தாயகம் மீதான இராணுவ ஆக்கிரமிப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டதும் தமிழ்ப் பெண்கள் சிங்கள இராணுவத்தால் மிக எளிதான இராணுவ இலக்குகளாக மாற்றப்பட்டனர். தமிழ்ப் பெண்களின் நிராயுதபாணியான ஆரம்பநிலை சிங்கள இராணுவம் அவர்களை வேட்டையாடுவதை இலகுவாக்கியது.

இவ்வாறு, தமிழ்ப் பெண்களை மனிதப்பிறவிகளாக கூட மதியாது இனத்தூய்மையைக் கெடுப்பதற்கு அழிக்கப்படவேண்டியவர்களாக, சிங்கள பௌத்த அரசியலும் – ஆயுதப்படைகளும் செயற்பட்டு வந்த மனிதக் கொடுமையைத் தடுப்பதற்கு தமிழ்ப் பெண்கள் தற்காப்புக்காக ஆயுதம் ஏந்தும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். இதன் பயனாக தமிழ்ப்பெண்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் அணி என்னும் சிறப்பு மிகு பெண்கள் அணியாகத் தம்மை உலகுக்கு வெளிப்படுத்தி படைத்து வரும் இராணுவ சாதனைகளைக் குவித்து வரும் விடுதலை வெற்றிகளை உலகு அறியும். குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகளினால் அழித்தொழிக்கப்பட்ட சிறீலங்கா இராணுவ முகாம்களில் பல தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் அணியினரின் அளப்பரிய பங்களிப்புடனேயே அழிக்கப்பட்டமை நம் தேச வரலாறு.

அது மட்டுமல்ல, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் தலைமையில் தமிழ்ப் பெண்களின் வளர்ச்சிக்குத் தடையாக இருந்த சீதனமுறைமைகள் உட்பட பல சமுதாய அடக்கு முறைகளும் தமிழீழப் பெண்களால் மாற்றியமைக்கப்பட்டு புதியதோர் சமுதாயமாக–ஆணுக்கும் பெண்ணுக்கும் அனைத்துத் துறைகளிலும் சமத்துவம் நிலவும் பூமியாக– தமிழீழ விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்ட தமிழீழப் பகுதிகள் விளங்கின–விளங்குகின்றன.

இந்தத் தன்மை சந்திரிகா என்னும் சிங்களப் பெண்ணால் யாழ்குடா நாடு உட்பட்ட சிறீலங்கா அரசின் ஆக்கிரமிப்புக்குள்ளான தமிழீழப்பகுதிகளில் இன்று மாற்றியமைக்கப்பட்டுள்ளது. ஆம்! சந்திரிகா பண்டாரநாயக்காவின் தலைமையிலான சிறீலங்கா அந்நிய அரசின் ஆயுதப்படைகளின் ஆக்கிரமிப்பே தமிழீழப் பெண்களின் சமூக–அரசியல்– பொருளாதார விடுதலையை ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் சீர்குலைத்துள்ளது. இந்த சிறீலங்கா அந்நியப் படைகளின் விலகல் மூலமே மீண்டும் எம் தமிழ்க்குல மானம் நிலைநாட்டப்பட முடியும்.

ஆயுதப்படை கொண்டு தமிழர்களை அழித்தொழிப்பதையே தனது அரசியலாக சந்திரிகா பண்டாரநாயக்கா தலைமையிலான சிறீலங்கா கருதுகிறது. இதன் அடிப்படையில் முழு அளவிலான இனஅழிப்புச் செயற்திட்டம் ஒன்றைச் செயற்படுத்தியும் வருகிறது. இந்த இன அழிப்புத்திட்டத்தின் ஒரு கூறாக சிறீலங்கா அரசால் தமிழ்ப் பெண்கள் மீதான பாலியல் வன்முறைகள்– இனக்கொலைகள் அதனது ஆயுதப்படைகள் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

எனவே, நாம் நம் தமிழ்க்குலமானம் காப்பதானால் அதற்குக் காரணமாக உள்ள சிறீலங்காப் படைகளை தமிழர் வீடுகளில் பொது இடங்களில் இருந்து வெளியேற்ற வேண்டும். இதற்கு இரண்டு வழிகளில் நாம் நம்மாலான அனைத்தையும் செய்யவேண்டிய நேரம் இது.

முதலாவது எங்கள் தாய்மாரின் – தமிழ்ப்பெண்களின் பாதுகாப்புக்கு ஒரே கவசமாக உள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் என்னும் தமிழீழ மக்களின் தேசியப் பாதுகாப்பினைப் பலப்படுத்த இயன்ற எல்லாம் செய்திடல் எம் தலையாய கடமையாக உள்ளது. உயிரால் உதிரத்தால் தமிழினமானம் – தமிழ்க்குலமானம் காத்து நிற்கும் அந்த தியாகமறவர் கூட்டத்திற்கு நம் உழைப்பால் உரமூட்டுவது ஒன்றே நாம் செய்யக் கூடிய பேருதவி. நிதியாக அள்ளிக் கொடுத்தாலே சர்வதேச நிதி உதவிகளை எல்லாம் ஆயுதங்களாக்கிச் சர்வாதிகார ஆட்டம் போடும் சந்திரிகா அரசால் வதைக்கப்படும் நம்மக்கள் விடுதலை பெற வழிபிறக்கும். இதற்காக, எங்கள் தாய்மார் சகோதரிகள் துடிதுடிப்பதை மாற்றியமைப்பதற்காக நாம் நம் புகலிட நாட்டு வாழ்வில் சிறிது கஷ்டப்பட்டு உழைத்து உதவுவோமாக. உள்ளதில் இயன்றதைக் கொடுத்து நம்குலமானம் காப்போமாக.

## முட்கிழுவங்கம்பு (சிறுகதை)........

உள்ளே விட்டபோது எனது தலை வேதனை நேராகவே என்னை மன்னார் வைத்தியசாலைக்கு தள்ளிச் செல்கிறது.

பரிசோதனை செய்த டாக்டரின் கீழ்ச்சொண்டு சற்று முன்பே நீள தலை பக்கவாட்டில் அசைகிறது. ஏதோ குனிந்து எழுதுகிறார். பின் நிமிர்ந்து ஒரு துண்டை எனது கையில் தந்து "முட்கிழுவம் முள்ளு, சரியான விஷம். இந்தத் துண்டைக் கொண்டு வவுனியா ஆஸ்பத்திரிக்கு போங்கோ", என்றுவிட்டு அவர் அடுத்த நோயாளியைப் பார்க்க அழைப்பு மணியை அடிக்கிறார்.

இந்தக் கொடிய தலை வேதனையுடன் வவுனியா போக வேண்டும். எப்படி போவது? என்ன செய்வது? போயே ஆக வேண்டும்.

தாங்க முடியாத வேதனையின் மத்தியிலும் எட்டுப் போட்டோக்கள் எடுத்து, படிவங்கள் நிரப்பி கச்சேரிக்கு, பொலிஸ் நிலையத்துக்கு என மீண்டும், மீண்டும் அலைந்து அனுமதி எடுத்து முடிக்க இரண்டு நாட்கள் காணாமல் போய்விடுகின்றன. இடையிடையே "ஐயோ பாவம்", என்ற சொற்கள் காதில் விழுந் தாலும் வழமையான பூஜைகள், நைவேத்தியங்கள் முறைப்படி நடந்து முடிந்து பயணம் ஆரம்பமாகிறது.

"சுள் சுள், என்று உச்சந்தலையில் சுண்டியிழுத்துக் குத்தும் வலி உள்ளங்கால் நரம்பிலும் எதிரொலிக்கிறது.

"முட்கிழுவ முள்ளு சரியான விஷம்.....!"

வேலிக்கரையில் கிடந்த முட்கிழுவமுள்ளு காலில் ஏறி விடுகிறது. "ஐயோ அம்மா!" என்றவாறு குதிக்காலை நிலத்தில் மிதியாதவாறு நொண்டி நொண்டி வீட்டுக்கு ஓடுகிறேன்.

என் குளறல்கள் மதிப்பிழந்து போக அம்மா காலை அமுக்கிப் பிடித்துக் கொண்டு முள்ளை மெல்ல இழுத்தெடுக்கிறாள்.

முள்ளு வெளியே வர துள்ளிக் கொண்டு முற்றம் முழுக்க ஓடித் திரிகிறேன். "மோனை முட்கிழுவ முள்ளு...சரியான விஷம்...." அம்மா பரிவுடன் அழைக்கிறாள்.

அம்மா ஆதரவாக மடியில் படுத்த அக்கா காலை இறுக்கிப் பிடிக்க உப்புக்கல்லை முள்ளுக்குத்திய இடத்தில் வைத்து நெருப்புக் கொள்ளியால் சுட.....

"ஐயோ..." என்று கத்துகிறேன்.

யாருமே என்னை அசைய விடவில்லை. துடிக்கத்துடிக்க 'உப்புக்கல்லுச் சூடு' நடக்கிறது.

மன்னார் வவுனியா பஸ்ஸில் யார் உப்புக் கல்லு வைத்துச் சுடுவது?

"கிரீச்...கிரீச்..."

அது என்ன சத்தம் ..ஓ...நோயாளிகளை ஏற்றித் தள்ளிச் செல்லும் ஸ்ரெச்சரின் சத்தமல்லவா....

இப்படித்தான் இப்படித்தானே என்னையும் தள்ளுவண்டிலில் படுத்தி சத்திர சிகிச்சை அறைக்குக் கொண்டு சென்றார்கள். ஓ அங்கு நாரியில ஒரு ஊசி போட்டதும் மெல்ல மெல்ல நினைவு தப்பி...

அப்போ–நான் வவுனியா ஆஸ்பத்திரியில் படுத்திருக்கிறேனா...

பாக்கியம்...நான்...

கொழும்பு.....வவுனியா...நூற்று அறுபது மைல்கள் முட்கிழுவ ங்கம்புகள்... உயிரோடு இருப் பாளா...அல்லது என்னைக் கண்ணால் காணாமலே கனத்தை மயானத்தில்.....

"பாக்கியம் பாக்கியம்...." என் குரல் மெல்ல ஈனஸ்வரத்தில் எங்கோ ஆழக் கிணற்றிலிருந்து வருவது போலிருக்கிறது. மீண்டும்–

எங்கோ நழுவி...எதையோ பிடிக்க முயல்கிறேன்...முடியவில்லை...இல்லை... பிடித்தே ஆக வேண்டும்...முடியவில்லை...

"ஐயோ...ஐயோ....!"

"உங்களுக்கு இப்ப சுகம்... நீங்கள் வீட்டை போகலாம்..."

டாக்டரின் வார்த்தைகள் ஒரு விதத்தில் நிம்மதியளிக்கின்றன.

இன்று, கொழும்புக்குப் புறப்பட வேண்டும் என்றாலும் வழியில் எத்தனை முட்கிழுவங்கம்புகளோ என்றாலும் தாண்டத்தான் வேண்டும்....தாண்டிச் செல்லத்தான் வேண்டும்.

மெல்ல வாய்க்குள் முணுமுணுக்கிறேன் "பாக்கியம் நீ..." பெருமூச்சுடன் கட்டிலை விட்டு இறங்குகிறேன். ☐

# போராளிகளின் கவிதைகள்

## தாமத விழிப்பும் வெட்கமும்

தித்திக்குமுன் புன்னகையை
தூரத் தொலைத்தும்,
நிமிர்ந்து நிற்குமளவிற்கு
விழித்தெழலுக்கான
தாமதத்திற்காய்–நான்
வெட்கித்து நிற்கிறேன்

என்,
ஆழ மனசினுள்
காலை வைத்தவளே!

நாளை–
நீயோ அன்றி நானோ
களத்தில் வீழ்ந்த சேதி
உனதோ அன்றி எனதோ
காதில் விழலாம்.....

அன்றியும்,
எனக்கு முனக்குமான
எங்களூரின்–அந்த
மாலையின் வசந்தங்கள்
மீண்டும் துளிர்க்கலாம்....

முற்றத்து மல்லிகையின் கீழ்
முழு நிலாவில்
தித்திக்கும்கதைகள் பேசி
களித்திருக்குங் காலம் வரும்.....
கட்டற்று–நிந்தன்
கண்களில் கண் கலக்கும் கணம்
நித்தமும் நிகழ்ந்திருக்கும்–மனசு
சொட்டச் சொட்ட அன்பில்
தோய்ந்திருக்கும்...

பார்த்திருக்கக்–கணம்
பறந்தோடும்....

என் செய்ய...
என் செய்ய...

இன்னமும்,
விழித்தெழலுக்கான
தாமதத்திற்காய்
வெட்கித்து நிற்கையில்...?

ஓ....
தாமதங்கள்–இன்னும்
எம்மை



தாமதப்படுத்துமல்லவா...?

– தணிகைமாறன்

## நீ வரும் வேளை வரை

அம்மா!
நான் மறைந்த பின்பும்
மனதில் எனைச் சுமந்தவளே!
தினமும்
கண்ணீர்ப் பூக்களால் என்னைக்
காயப்படுத்தாமல்
இதழ்விரித்த மலர்களோடு
நான் துயிலும் இடம் வந்து
துயிலெழுப்பிச் செல்வாய்....
பின் மாலை வந்து தாலாட்டுவாய்.
இன்று ஏங்கும் உணர்வுகளோடு
நீ எங்கோ....
நீ எங்கிருப்பாய்?
எதிரிச் சிறையிருப்பை வெறுத்து
வன்னியின் மடியில்
காடுகளில் அல்லது
வீதியோரத்து மரநிழலில்
தவித்திருப்பாய் என்பது தெரியுமம்மா
கார்த்திகை இம்முறையும்
கண்மலர்ந்தது.
நினைவுகளால் அலங்கரிக்கப்பட்ட
வீதிகளில் எனைச் சுமந்து வந்து
நினைவுருகி விளக்கெரிக்க முடியாமல்
போனதற்காய் வெந்திருப்பாய்
நாம் உறங்கும் சுவடு தெரியாமல்
மறைக்கப்பட்ட அந்த நிலத்திற்காய்
உன்னுள் புண்பட்டுப் போயிருப்பாய்.
தீப்பந்தச் சுடரில் தெரியும்
என் முகத்தைத் தேடி
விழிநீரில் திரிபோட்டு
விளக் கெரித்திருப்பாய்.
ஓடிவந்து தழுவி அணைக்கும்
கல்லறையைக் காணாது
கலங்கும் என்தாயே....
நீ மகிழ்ந்திருந்து என்னைச் சிருஷ்டித்த
இந்தப் பூமியில்
இன்னும் நான் உறைந்துள்ளேன்.
உலாவருகின்றேன்.
இந்த மண்ணில் பதிந்துள்ள
எனது சுவடுகளை
யாராலுமே அழித்துவிட முடியாது.
பேய்கள் உலாவரும் எமதூரில்
ஒரு இனிய காலையைக்
கூட்டி வருவதற்கு
நானில்லை என்ற ஏக்கமே எனக்கு.
ஆயினும்,
என்னைப்போல உனக்கு முன்னே
அதே கனவுகளைச் சுமந்து செல்லும்
தோழர்களின் துப்பாக்கி முழக்கத்தோடு
நான் ஒலிப்பேன்.
பகைக் கெதிராய் இடியாகும்
வெடியோசைகளோடு அதிர்வேன்
உன்னைத் தழுவிச் செல்லும்
வசந்தக் காற்றோடு நான்
வலம் வருவேன்.
எனக்கு இறப்பில்லை
இந்த இனிய வாழ்வுக்காய்
என்னையீன்ற உனக்கு என்றும்
எனதும் நன்றிகள்
அன்றும் இன்றும்
எனைப்போல
எங்கள் யாவரையும் நிமிர்த்தி வைத்த
தலைவனை நம்பியிரு.
தூரங்கள் சுருங்க
இம் மண்ணுக்கொரு காலை புலரும்
துயரங்கள் மடியும்.
அடுத்த வருடமும்
கார்த்திகை கண்மலர்த்தும்.
பூரிப்போடு அன்று என்
அருகுவந்து விளக்கெரி.
கண்களைத் துடைத்துவிட்டு
அக்காலத்திற்காய் காத்திரு
அம்மா நான் துயிலவில்லை.
உனது அமைதியான தாலாட்டலுக்காய்
நீ வரும்வேளை வரை
அன்புடன் விழித்திருக்கும்
உன் குழந்தை.

–அம்புலி

## உறங்க மறுக்கும் என்னூர்

நான் உறங்கும் நேரத்தில்கூட
என்னூர் உறங்க மறுக்கிறது
பிய்ந்தலோ கந்தலோ
ஆடையொன்று என் மானத்தை
காத்து நிற்குது.
ஆனால், என் ஊரின்கதி?



பாவம்! பச்சைப் பசேலென்ற
மேனிசெழிக்க
பொலிந்திருந்த பயிராடை
வாடி வெந்து
கொள்ளிச் சாம்பராகி....
விழி மூடாது துடிக்கிறது என்னூர்
அதன் ஆன்மா துடித்து வதைகிறது.

தன் பிள்ளைகளை
தலை நிமிர்த்தி வளர்த்தெடுத்த
தாயின்மடி
ஓநாய்களின் ஊர்வலமும்
கூச்சலும் கண்டு
கனத்துப்போய் விம்மியழுகிறது!
முள்படர்ந்து மூடிய தெருக்களும்
முகமிழந்து பாறிய வீடுகளும்
கொடுஞ் சுடலையாய் மாறிய தோட்டங்களும்
என்னூரின் உறக்கம் கலைத்தன, ஐயோ!

கைகூப்பி வணங்கிய கோயில்கள்,
கறையான் புற்றெழும்பி
சிலந்தி திரைவிரித்து
வெளவாலின் அடையிருத்தலாயிற்று.
மூச்சு விடவும்
முகம் நிமிர்த்திப் பார்க்கவும் இயலாமல்
நெஞ்சு முட்டி அழுந்த
முட்டுப் பிடித்தவர்போல
முகம் காய்ந்து கிடக்கிறாள்.
என்னூராள்.

மழைவரும் வேளையிலும்
மயில்கள் ஆடவில்லை
மழை ஓய்ந்த பின்னும்
குயில்கள் கூவவில்லை
ஓ...!மனித சஞ்சாரமற்ற
ஊராச்சே,
இல்லை! இல்லையில்லை!
சுடுகாட்டில்
எப்படி அவை வாழும்?
அதுதான்
சுடலைக் குருவியும், காகமும்
நரிகளும்
கூடிக் குதறுகின்றனவே.
ஓநாய்கள் அலைகின்றனவே!

இப்படியாய் எனது ஊரில்
பேய்கள் பெருகியிருக்கையில்
எப்படி உறக்கம் வரும்?
எப்படி உறக்கம் வரும்?

–மாவேலன்